
"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

ஆடி - ஆவணி - புரட்டாதி - 2000

சைவ முன்னேற்றச் சங்கம் UNITED KINGDOM கலசம்

# கலசம்
# KALASAM

உயர்வாசல் குன்று முருகன் ஆலய சித்திரத் தேர் திருவிழா சிறப்பிதழ்



லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ் £1.00

SML

# Royal Jewelry

* மனம் கவரும் தங்க நகைகள்
*தங்கம் - கரட் உத்தரவாதம்
*தாலி - பொன்னுருக்கல் வசதிகள்
*உங்கள் தேவைகளுக்கேற்ற வண்ணம் நகைகள் பிரத்தியேகமாய் தயாரிக்கும் வசதிகள்
* சாத்திர விதிகளுக்கு ஏற்ப நவரத்தின மோதிரங்கள் ஓடர்களுக்குச் செய்து கொடுக்கப்படும்



புன்னகைக்கு நிகர் எங்கள் பொன்னகையன்றோ!
வாருங்கள் வந்து பார்த்து வாங்குங்கள்!!

**287, HIGH STREET NORTH , EAST HAM,**
**MANOR PARK, LONDON E12 6SL**
**Tel: 0208 472 5500**

ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்

# கலசம்
# KALASAM

மணி 8 ஆடி- ஆவணி- புரட்டாதி 2000 ஒலி 31

## அன்புடன் வாழ்வோம் ஆறுதல் அடைவோம்

கோயில்கள் மனித குல மேம்பாட்டிற்கும் வாழ்க்கையினைச் செம்மைப் படுத்தவுமே தோற்றுவிக்கப்பட்டன.

இதனை ஆலயத்தை நிர்வகிப்போரும் பக்தர்களும் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். இலண்டன் மாநகரத்தில் பல ஆலயங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அவசரமான இந்த உலகத்தில் மனிதன் சிட்டாகப் பறந்து கொண்டிருக்கின்றான். இந்நிலையிலே அவனுடைய தேவைகளையொட்டி ஆலயங்கள் அமைக்கப்படுதல் அவசியம் தான். ஆயினும் தோற்றுவிக்கப்படும் ஆலயங்களில் ஒருவகையான தன்ஆளுமையும் உடமைக்கருத்தும் வலுப்பெறுவது வேதனைக்குரியதாக உள்ளது. ஆலயத்தை தோற்றுவித்தோர் மத்தியில் ஆலயம் தங்களுடையது என்கிற குரலும் ஆலயத்துக்கு வழிபடச்செல்லும் மக்கள் மத்தியில் விகிதாசாரப்படி நாங்கள் தான் கூடச்செல்கின்றோம். ஆதலால் ஆலயம் எங்களால் தான் நடக்கிறது. எங்களுக்கும் ஆலயத்தில் ஒரு பங்கு வேண்டுமென்கிற குரலும் ஓங்கி ஒலிக்கின்றன. இரு சாராருமே தவறான பாதையில் செல்கின்றார்களே என்பதை நினைக்கும் போது வேதனை மிகுந்ததாகத்தான் இருக்கின்றது. ஆலயம் யாராலும் தோற்றுவிக்கப்படலாம் யாராலும் வழிபாடு செய்யப்படலாம். ஆனால் ஆலயம் என்பது மக்களின் மனதை வழிப்படுத்தும் ஒரு வழிபாட்டு நிலையம் என்பதை மறந்துவிடக்கூடாது. இறைவன் இனம் மதம் மொழி இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டவன். இறைவன் ஆலயம் அமைக்கச் சொல்லிக் கேட்டதுமில்லை தன்னை வழிபடச் சொல்லிக் கேட்டதுமில்லை. எல்லாமே மனிதனின் முயற்சி தான். பிரச்சினைப்படுவதும் இவன்தான்.

இன்று இலண்டன் முருகன் ஆலயத்திலும் இப்பிரச்சனை பெரிது படுத்தப்பட்டுள்ளது. .இப் பிரச்சினை கலசத்தின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வாலயத்தின் அங்கத்துவ உரிமை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இலங்கை மக்கள் தாம் கூடுதலாக இவ்வாலயத்திற்குச் செல்வதாகவும் தாங்களும் இவ்வாலய அங்கத்தவர்களாக வேண்டும் என்றும் குரல் எழுப்பியுள்ளார்கள். இலங்கை மக்கள் இதிலே அவதானமாக இருக்கவேண்டும். அங்கத்துவக் கட்டுப்பாடு இலங்கை மக்களுக்கு மட்டுமல்ல ஆலயத்துக்குச் செல்லும் சகல மக்களுக்குந்தான் என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

இது ஒரு அரசியற் பிரச்சினை அல்ல. ஆலயப்பிரச்சினை. ஆகவே இருசாராரும் அன்புணர்வுடன் இதை அணுகவேண்டும். இலங்கையில் தமிழ் மக்கள் ஆற்றொணாத் துன்பத்தை அனுபவித்து வரும் போது இம்முருகன் ஆலயம் எவ்விதமான உதவிகளையும் செய்ததில்லை என்றும் குரல் எழுப்பியுள்ளது. இது உண்மையா பொய்யா என்பது தெரியவில்லை. உண்மையாக இருந்தால் ஆலயத்தினது போக்குத்தவறே. இலண்டன் மாநகரத்தில் வருமானம் பெருவாரியாகக் கொண்டவை ஆலயங்களே. ஆலயங்களில் உண்டியல் முறை கொண்டுவரப்பட்டது ஆலயத்தை நிர்வகிப்பதற்கும் நலிந்தோருக்கு உதவுவதற்குமே. இந்த வகையில் பார்க்கும் போது நான் அறிந்த வகையில் பல ஆலயங்கள் நலிந்தோர்க்கு உதவியதை பத்திரிகைகள் வாயிலாக அறிந்திருக்கிறேன். இலண்டன் முருகன் ஆலயத்தின் பெயர் இந்த வரிசையில் இருக்கவில்லை என்பது உண்மையே. இந்நிலையை முருகன் ஆலயம் மாற்றிக்கொள்வது ஆலயத்தின் நோக்குக்கு ஏற்றதாக இருக்கும்.இந்நிலையின் ஆதங்கம் தான் பக்தர்களை விரக்தி அடையச் செய்து அங்கத்துவப் பிரச்சினையில் மூக்கை நுழைக்க வைத்திருக்கலாம் ஆதலால் இந்தப்பிரச்சினையைப் பெருக்க விடாமல் சம்பந்தப்பட்டவர்கள் அமர்ந்து பேசி சுமூகமான தீர்வுக்கு வருவது அறிவுடையோர்க்கும் அன்புடையோர்க்கும் நன்று என்று கலசம் நினைக்கின்றது.

இம்முறை கலசம் உயர்வாசற்குன்று முருகன் கோயில் தேர்த்திருவிழாச் சிறப்பு மலராக வருகின்றது.

இத் தேர்த்திருவிழா சம்பந்தமான சிறப்புக்கட்டுரை உள்ளே உள்ளது.

எல்லோரும் அன்புடன் வாழ்வோம்.

இறைவனைத் தரிசிப்போம். ஓம்நமசிவாய.

மு. நற்குணதயாளன்

ஆசிரியர்: திரு. மு. நற்குணதயாளன்
துணை ஆசிரியர்: திரு. சி. அற்புதானந்தன்
நிர்வாகம்: திரு. வ.இ. இராமநாதன்
உதவி நிர்வாகம்: திரு. சிவ. அசோகன்

நிர்வாகக் குழு:
திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம்
திரு. ந. சிவராசன்
திரு. S. தர்மலிங்கம்
Dr. N. நவநீதராசா
திரு. இ. சிவானந்தராசா
திரு. S. சிறீரங்கன்
திரு. பால. ரவீந்திரன்

தொடர்பு முகவரி:
49, Marlands Road
Clayhall, Ilford, Essex, IG5 0JJ
Tel:020 8550 4233, Fax:020 8550 4233

# உயர்வாசற் குன்று முருகன் ஆலயம்



உலகெல்லாம் பரந்து வாழும் சைவத்தமிழ் மக்கள் தம் சமய வழிபாட்டு முறைகள் கலை கற்கோயில் வேதாகம மரபுகளை தம் வாழ்வுடன் பிணைத்து வாழ்ந்த மையால் எங்கெல்லாம் தமிழர் வாழ்ந்தார்களோ அங்கெல்லாம் தங்கள் அடையாளத்தை நிலைநிறுத்துவதில் திருப்திப்பட்டுக் கொண்டனர். 1960ம் ஆண்டு காலப்பகுதியில் இலண்டனில் மிகவும் குறைந்த தொகை தமிழ்ச் சைவ மக்களே வாழ்ந்துவந்தனர். மாறுபட்ட கலாச்சார சூழ்நிலையில் இருந்தமையால் தம் சமூகத்தினரை ஓர் அமைப்பின் கீழ் கொண்டு வருவதின் அவசியத்தை உணரத் தலைப்பட்டனர். எனவே பிரித்தானிய இந்து மாமன்றத்தை "HINDU ASSOCIATION OF BRITAIN" உருவாக்கி வெற்றி கண்டார்கள். பின் இந்த ஸ்தாபனத்தின் முன்னேற்றமாக கோயில் கட்டும் நோக்குடன் BRITANIA HINDU (SAIVA) TEMPLE TRUST" பிரித்தானிய சைவக்கோயில்கள்(இந்து) அறக்கட்டளை என்பதனை ஸ்தாபித்து 1974ம் ஆண்டு உரிய யாப்புடன் பதிவு செய்வித்தனர். அக்காலத்தில் இருந்த பெரியோர்களுடைய கோயில் காதல் அவர்களை எப்படி எல்லாம் வேகமாக பொங்கி நடைமுறைப்படுத்தப்பட்டமை இறைவன் கருணைதான். **அறிவினால் மிக்க அறுவகைச் சமயம் அவரவர்க்கங்கே இன்னருள் புரிந்து** என்ற தேவார வாக்குக்கு இணங்க-இன்று நாம் காணும் உயர்வாசல் முருகன் திருக்கோயில்-பரம் பொருளின் திருவருளால் மக்களால்- மக்களுக்கு-மக்களுடைய கோயிலாய் மிளிர இறைவன் அருள் பரிபாலித்தது வியக்கத்தக்கது. இந்தக் கோயில் அந்தக்கால நிய-திக்கு ஏற்ற முறையில் வழிபாட்டிற்கு என்றே அமைக்கப்பட்டது. இங்கே நடைபெறும் ஆசார அனுடஷ்டானங்கள்- சைவ சமயச்சடங்குகள் வழிபாடுகள்-பக்தி மயம் -மக்களுக்கு சைவ உணர்ச்சியை ஊட்டி

இத்தலம் தன்னை யாம் அடைகுவாமெனப்
புத்தியில் நினைப்பினும் புறத்தல் சொல்லினும்
பத்தடி நடப்பினும் பரிந்தநோய் எல்லாம்
கொத்தொடும் அவர் புறம் வழிக்கொண்டாடுமே.

என்று உணர்ந்து பயன் பெறும் அடியார் கூட்டங்களை தினமும் காணலாம். அப்படி கோயிலை அமைத்து செயற்கரிய சாதனையை நிறைவேற்றிய திரு சோ. சபாபதிப்பிள்ளை ஐயா அவர்களைப் பெருமையுடன் நினைவு கொள்கின்றோம்.


இந்தக் கோயிலின் 14வது வருடாந்த விழா விக்கிரம வருடம் ஆனிமாதம் 12ம் நாள் திங்கட்கிழமை (2000ம் ஆண்டு யூன் மாதம் 26ம் திகதி)வெகு விமரிசையாக கொடியேற்றம் நடந்து ஆனிமாதம் 25ம் நாள் (யூலைமாதம் 9ம் திகதி) ஞாயிற்றுக்கிழமை அன்று தேரோட்டவைபவம் புதிய சித்திரத்தேரில் நடக்க திருவருள் கூடியுள்ளது. இவ்விழாவில் பண்இசை ஆன்மீக சொற்பொழிவுகள்-மங்கல வாத்திய இசை வெகு அழகான அலங்காரங்களுடன் நெறி தவறாத வேதாகம கிரியை முறைகள் எல்லாம் மந்திரம்-தந்திரம்-கிரியா பூரணத்துவத்துடன் நடப்பது இறை உணர்வையும் இறைவனோடு லயப்படுத்தும் கருவியாக உள்ளது. ஆண்டாண்டு தோறும் பல

முன்னேற்ற நிகழ்வுகளை வேண்டி இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இன்றைய தேர்த் திருவிழா சிவபெருமான் செய்த திரிபுர தகன நிகழ்வை தத்துவப்படுத்துவதாகும். அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன் முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்

முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை ஆரறிவாரோ

என்று திருமூலர் திரிபுர தகன நுட்பத்தை கூறுவார்.



தேர் என்னும் சொல்லுக்கு ஆராய்தல் – அறிதல் – சிந்தித்தல் – தெரிதல்–பயிற்சி–அடைதல் என்று பொருள் கொள்ளலாம். உடல் உயிா எத்தகையது? உடலுக்கும் உயிருக்கும் உள்ள உறவு என்ன என்று தேர்ந்து கொள்ளுவதை வலியுறுத்துவது தேர். தேர் என்ற சொல்லுக்கு ஒத்த கருத்துச் சொற்கள் விமானம்–கொடிஞ்சி–சயந்தனம்– என்பன . தேர்கள் அளவு :முழுத்தேர், முக்கால்த் தேர், அரைத்தேர் என்று மூன்று வகை உள்ளது.

தேர் வகைகள் இழுப்புத்தேர் வடம் பிடித்து இழுப்பது

எடுப்புத்தேர் – தோள்களில் சுமப்பது,

கட்டுத்தேர்– தற்காலிகமாக கட்டி இழுப்பது

கிண்ணித்தேர்– மேல்பாகம் பித்தளையால் ஆனது

நிலைத்தேர் அலங்காரம் செய்து நிறுத்தி வைப்பது

தேர்களின் அமைப்பு சதுரத் தேர்–வட்டத்தேர்– எண்கோணத்தேர் –அறு கோணத்தேர்

பொதுவாக இறைவனை நாடி மக்கள் கோயிலுக்கு வருவார்கள். தேர்திருவிழாவிலே இறைவனே மக்களை நாடி வீதிவலம் வரும் பண்பு பிரதி–பலிக்கின்றது. இது ஆன்மாக்களை நாடி இறைவன் வரும் தத்துவம்.

இந்து மதத்தின் ஈடுஇணையற்ற தத்துவத்திருவிழா. உயர்வாசற்குன்று முருகன் சித்திரத்தேர் ரங்கூன் தேக்கு மரத்தினால் கைவல்லமை வாய்ந்த சிற்பிக–ளால் செதுக்கப்பட்டு ஜெயகாந்தன் என்ற தலைமைச் சிற்பியால் பரீட்சித்து நிறைவு செய்த அற்புதப்படைப்பு. கலை எழில் மிக்க வண்ணக் கலைப்பொக்கிஷம் என்ற வரிசையில் இத்தேர் உள்ளது. கம்பீரமான நாலு சக்கரங்கள் அபூர்வமான சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த பீடப்பகுதி. பீடத்தையும் கோபுரத்தையும் இணைக்கும் கலையழகு கொஞ்சும் பவளக்கால்கள் அதற்கு மேலே கோபுரம் போன்ற சிகரப்பகுதி– உச்சியில் தங்கக்கலசம் எல்லாம் அழகிலும் அற்புத வேலைப்பாடுகளிலும் ஒப்பற்றவை. ஆறுமுகப் பெருமானின் தேர் அறு கோணமாகவும் – கோணங்களி லெல்லாம் பவளக் கால்களும் பவழக் கால்களில் எழில் மிகு யாழிகளும் எல்லாம் அற்புதப் படைப்புக்களாகவே உள்ளன. ஆன்மாவுக்கு உடலே தேராகும். இறைவனுக்கு அனைத்துலகங்களும் அடக்கிய பேரண்டமே தேராக அமைதல் வேண்டும். அத்தேரே இறைவன் கோயிலுமாகும். இறைவன் கோயில் போன்று அமைக்கப்படும் தேரில் பூலோக வாழ்க்கையும் சுவர்க்கலோக வாழ்க்கையும் சித்தரித்துக் காட்டி எங்கு நின்று பார்தாலும் ஒரே தோற்றம் தரும் வகையில் அமைக்கப்பட்ட இத்தேர் பார்க்க பார்க்க பரவசமூட்டும் கலைப்பெட்டகம். உடலாகிய தேரில் உயிராகிய அரசன்–உலகமாகிய மாட வீதியில் வருவதை உருவகம் செய்வது தேர் விழா. அதைக்கண்டு தரிசனம் செய்தவாகள் புண்ணியர்கள்.

கோயில் புதிதாகச் செய்யப்பட்ட இரதத்தை சோதனை செய்யுமாறு முதல் முதலாக ஓட்டிப் பார்ப்பதை வெள்ளோட்டம் என்பர். இந்தப் புதுத்தேரில்– சில்லுகளைத் திருப்பவும் – நிறுத்தவும்–திருப்பிகளும்– நிறுத்தல் சாதனங்களும் பொருத்தப் பட்டுள்ளன. தேர்ச் சிற்பியின் பொங்கல் பூசை முடிவுற்று வெள்ளோட்டம் பார்க்கப்பட்டமை திருப்தி அளித்தது புதுத்தேர் நிறுத்துவதற்கு தேர்க்கொட்டகை தேர் குளிரால் பாதிக்கப்படாமல் இருக்கும் வண்ணம் கோயில் வளாகத்தில் பெரும் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

விக்கிரம வருடம் ஆனி மாதம் 25ம் நாள்(யூலை மாதம் 9ம் திகதி) ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணியளவில் உயர்வாசற் குன்றுறையும் ஸ்ரீ முருகப்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராய்

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அறு கோணச் சித்திரத்தேரில் பக்தர்களின் உள்ளக் குறைகளைத் தீர்ப்பதற்காக பவனிவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமையும். தேர்த்திருவிழா என்றால் பக்தர்கள் உற்சாகம் கரைபுரண்டோடும். வடம் பிடிக்க ஊர்மக்கள் முந்துவார்கள். ஆண்களே வடம் பிடிப்பார்கள். அம்மன் தேராக இருந்தால் பெண்களும் வடம் பிடிப்பார்கள். தேர்த்திருவிழா சமூக ஒற்றுமைக்கும் கூட்டுறவுக்கும் வழிவகுக்கும். கடவுட்காட்சியோடு கலைநயக்கும் வாய்ப்பையும் அது மக்களுக்கு வழங்கிகின்றது.

உயர்வாசற்குன்று முருகன் செந்தமிழ்க்கடவுள்– லண்டனில் தேரில் பவனி வரும் நாள் எல்லாருக்கும் நன்நாளாகவும் அநீதியற்ற தமிழ் அரசோச்சும் சுதந்திர நாட்டை எதிர் பார்த்துக்கொண்டு உங்களை

வடம் பிடிக்க வாரீர் –திருத்தேர்

வடம் பிடிக்க வாரீர் –

வடம் பிடித்தால் இறையுலகில் இடம் பிடிக்கலாம் என்று மாதவத்தோர் ஓதுவதை மதிப்புடனே எண்ணி இங்கு வடம் பிடிக்க வாரீர்.

உலகியல் வாழ்வினிலே உழன்று திரிந்தவர்க்கு ஓம்


என்னும் மெய்ப் பொருளாய் ஒளிரும் முருகன் அருள் நல்க வேண்டுமெனில் இதயம் நெகிழ்ந்துருகி

உயர்வாசல் முரகன் திருத்தேரை இழுத்து மகிழ்ந்திடவே–வடம் பிடிக்க வாரீர்

*********

**நெருப்பு வெப்பத்தையும் வெளிச்சத்தையும் கொடுக்கிறதே. வெளிச்சத்தினால் பார்க்க முடிகிறது என்பது உண்மைதான். ஆனால் வெப்பத்தினால் உடல் வெந்துவிடுகின்றதே. கர்மம் செய்யும்பொழுது வெறும் ஆனந்தம் கிடைக்கிறது என்பது மட்டும் அல்ல துன்பமும் இருக்கிறதே**


# RASAM GAYATRI SILKS
## ராசம் காயத்திரி சில்கஸ்
312, High Street North, Eastham, London E12.



நவீன ரக கூறைச்சேலைகள் - காஞ்சிபுரம், றங்கோலி, கோலம், அபூர்வா, மிலேனியம்
டிசைனர் சில்க்சேலை Daksnotree
பட்டுவேட்டி, குர்தா, பஞ்சாபிகள், பரதநாட்டிய உடைகள், மெட்டி, கொலுசு
சேலை எடுப்பவர்களுக்கு பிளவுஸ் - துரித சேவை
காலத்திற்கேற்ப மாறும் Golden Tissue - Double Gold Tissue - Jari Gold Tissue Sarees
சிறுவர்களுக்கான அமெரிக்க - சிங்கப்பூர் உடைகள்
யாவுக்கும் புதிய இடத்தில் புதிய, புதிய பொழிவில்

**RASAM GAYATRI SILKS**
**TEL: 020 8552 6060**

# முடிவிலாதுறை சுன்னாகத்தான்

-முரகவே பரமநாதன்-

**மாமதுரைத் தெரு**
**வளையல் கொண்டுவந்தான்**
**சோமசுந்தரனென் றுந்தீபற**
**சுன்னாகத்தானென்றுந்தீபற**
**யோகர்சுவாமிகள் நற்சிந்தனை**
***-திருவுந்தியார் 111.5***

ஒருவரை அல்லது ஒருத்தியை வசிக்கும் இடப்பெயரால் அழைப்பது ஒரு வழக்காறு.. இடவாகுபெயர் என இதை இலக்கணகாரர் பேசுவர் எழுதுவர். இந்த மரபு ஆலயங்கள் எங்கிருந்தாலும் மூலமூர்த்தியையும் அப்படி உரிமை யோடு மக்கள் அழைப்பார்கள். திருப்பதியான் மாமதுரையான் திருச்செந்தூரான் நல்லூரான் வல்லி புரத்தான் செல்வச்சந்நிதியான் (துணை) என்று மக்கள் அழைப்பதுண்டு. மாவை முருகனைப்பாடிய முத்துக்குமாரசாமிக் கவிராயர் ஊர்ப்பெயர்களை ஒருபாடலாக ஆக்கியுள்ளார். அப்பாடலின் துவக்கம் முடிவிலாதுறை சுன்னாகத்தான் என அமைந் துள்ளது. இப்பாடல் இரு பொருள்தர அமைந்துள்ளது. சுன்னாகம் யாழ்ப்பாணத்திற் பிர சித்தமான ஊர்ப்பெயர். சுல் நாகம் –சுன்னாகம் சுல் –வெள்ளி நாகம் –மலை எனவே சுன்னாகம் வெள்ளி யங்கிரி எனப்பொருள் படும். வெள்ளி மலை என்பது இமயமலையை. இது பனிபடர்ந்தது. இதற்குக் கைலாயமலை என்றும் பெயர். இந்தக் கைலாயமலையில் சிவபெருமான் முடிவிலாது காலாகாலமாய் காலத்தையும் கடந்து உறைகின்றார். எனவே அவரை சுன்னாகத்தான் என முத்துக்குமார சுவாமிக் கவிராயரும் மகாயோகசுவாமிகளும் (சுன்னாகத்தான்) எனச் சிலேடையாகப் பாடியுள்ளார்கள். திமுறைகள் தோறும் இக்கைலாயம் இடம் பெற்றுள்ளது அப்பர் சுவாமிகளின் திருவாக்குகளுள் ஒன்று இது

**மனத்தகத்தான் தலைமேலோன் வாக்கினுள்ளான்**
**வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்**
**இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்**
**ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம் பொன்**
**மனத்தகத்தான் நறுங் கொன்றைப் போதிலுள்ளான்**
**பொருப்பிடையான் நெருப் பிடையான்**
**காற்றிலுள்ளான்**
**கனத்தகத்தான் கயிலாயத் துச்சியுள்ளான்**
**காளத்தியானவனென் கண்ணுள்ளானே**
***ஆறாம்திருமுறை 8–4***

இந்து சமயத்திற்கு–சிறப்பாக சைவத்திற்கு மலைகளோடு தொடர்பு உண்டு. மூர்த்தி தலம் தீர்த்தம் தலத்தின் தனிப்பொருமையை விளக்குவன. இவ்வண்ணமே தல விருட்சமும் குறிஞ்சி நிலத் தெய்வமான முருகனாகப் பேசப்பட்டது. தொல்காப்பி யத்திலே. இன்று உலகெல்லாம் முருகன்கன் பூசிக்கப்படுகின்றான். குன்று தோறாடும் குமரவடி வேலனுக்குக் கதிரமலை தொட்டு மருதமலை வரை ஆலயங்கள் மலைகளிலேதான் அதிகமுண்டு.. பழமு திர்ச்சோலை பழனி பரங்கிரி சுவாமிமலை தணிகை விராலிமலை என்று பல பெயர்களில் கோயில்கள் இருப்பினும் கைலையில் அவன் தந்தையோடு வேறாகாமல் வீற்றிருக்கிறான் என்பதை அருண கிரிப்பெருமான் திருப்புகழிற் காட்டியுள்ளார்.

**அரஹர வுருகிச் சேசெயென திரு நடனக் கோல**
**மருள் செயு முமைமிற் பாக ரருள் பாலா**
**அலரணி குழல்பொற்பாவை திருமக ளமளிப்**
**போரொட்டியவ கயிலைக்கான பெருமாளே**
***திருப்புகழ் 237***

**தானந் தனத்தன னா வுண்டு சுற்றிமது**

**தானுண் கடப்பமல ரணிமார்பா**
**தானங்குறித்து எமையாளுந்திருக்கயிலை**
**சாலுங்கு றத்தி மகிழ் பெருமாளே *–திருப்புகழ்238***

**சிவன்ம கிழ்ந்தரு ளானைமா முகன்மருவி**
**மனம் மகிழ்ந்தருள் கூரவோர் கயிலைமகிழ்**
**திகழ் குறிஞ்சியின் மாது பால்**
**மருவுபுகழ் பெருமாளே *–திருப்புகழ் 240***

**மிசைத்துத் திடத்தொ டுற்று அசைத்துப்**
**பொறுத் தரக்கன்**
**மிகுத்துப் பெயாத்தெடுத்த கயிலாய**
**மிசைக்குற்றடுத்து மற்ற பொருப்பைப்**
**பொடித்திடித்து**
**மிதித்துத் துகைத்துவிட்ட பெருமாளே**
***– திருப்புகழ் 242***

ரசதகிரி எனப்போற்றப்படும் கைலாயங்கிரி வெள்ளிமலையே சுன்னாகம் எனப்பட்டது.
மன்னும் இமயமலை எங்கள் மலையே வெள்ளிப்பனிமலையின் மீதுலாவுவோம் என்ற பாரதி வாக்கும் சிந்தனையைக் கிளர வைக்கின்றது..
ஹிமம் என்றால் பனி அசலம் என்றால் மலை எனவே ஹிமாசலம் இமயமாயிற்று . மலையரசியாகத் திகழ்பவள் பார்வதி. கைலை வாசமும் கைலையும் கற்பனை யாகவும் மானசீகமாகவும் கருதப்படுகின்றது. பலமகான்கள் தரிசித்த கைலைக்காட்சியை நூல்வடிவமாகவும் வடித்துள்ளனர். விவேகானந்தர் மட்டக்களப்பு விபுலானந்தர், சச்சிதானந்தர், சித்பவானந்தர் இவ்வரிசையினர். (சிலர்) சிவலோகமே கைலாசமென்ற கருதுகோளும் உண்டு. கைலையெ–வற்புப்போல மேரு மலையும் சைவத்தோடு பேசப்படும். இம்மலை பற்றிய சீரியவிளக்கங்கள் சமயிகளை எட்டவில்லை. அஃது திருமூலர் காலத்திலேயே பேசப்பட்டிருக்கிறது. சுந்தரர் சேரமான் ஔவையார் கைலை சேர்ந்த வரலாறுகள் புராணங்களிலே இடம்பெற்றுள்ளன. சேரமான் பெருமான் நாயனார் பாடிய திருக்கைலாய உலா எழுந்தது கைலையிலே தான். இதை ஆதியுலா என்பர். அருணகிரியார்.

**ஆதரம்பயி லாரூரர் தோழமை**
**சேர்தல் கொண்டவ ரோடேமுனாளினில்**
**ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி**
**ஆதியந்தவுலாவாசு பாடிய**
**சேரர் கொங்குவை காவூர்ந நாடதில்**
**அவினன் குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே**
***– திருப்புகழ்104***

ஆதிசேடனுக்கும் வாயு பகவானுக்கும் ஏற்பட்ட போட்டியில் மூன்று சிகரங்கள் பறித்தெறியப்பட்டன. அவை தென்கைலை (தட்சிணகைலை) என்று அழைக்கப்படுகிறது. திருக்காளத்தி திரிசிபுரம் திருக்கோணமலை என்பனவே மூன்றும் . மூலவரை வடகயிலை எனப்படும். தட்சிண கைலாசபுராணம் கோணமாமலையிற் சிறப்புப் பேசும் நூல். சம்பந்தர் கோணேஸ்வரத்தைப் பாடியுள்ளார்.
பதினோராந்திருமுறையிலமைந்துள்ள கைலைபாதி காளத்திபாதியந்தாதி நக்கீரர் அருளிச்செய்ததாகும். இதில் நூறு பாசுரங்கள் உண்டு.

**வரமாவதெல்லாம் வடகயிலை மன்னும்**
**வரமா உன் பாதார விந்தம் –சிரமார**
**ஏற்றிடும் போ தாகவுந் தென்மனதத்தில்**
**எப்பொழுதும்**
**வைத்திடு நீ வேணண்டேன்யான் மற்று..**
***கயிலைபாதி காளத்தியந்தாதி (99)***

**மற்றும் பல பிதற்ற வேண்டாம் மட நெஞ்சே**
**கற்றைச் சடைஅண்ணல் காளத்தி–நெஞ்சிற்கண்**
**ஆராஅமுதின் திருநாமம் அஞ்செழுத்தும்**
**சோராமல் எப்பொழுதுஞ் சொல்**
***கயிலை பாதி காளத்தியந்தாதி (100)***

இராவணன் திக்விஜயம் செய்யும்போது தடைய–ாய் இருந்த கைலையைக் கிளப்பினான். கைலை வேந்தன் பெருவிரல் நுனியை அழுத்தினார். நொறுங்கிய இராவணன் சாமகானம் பாடி மீண்டான் என்பதை திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பதிகந்தோறும் பாடியுள்ளனர்.

**போதும் பொன்னும் முந்தியருவி புடைசூழக்**
**கூதன்மாரி நுண்டுளி தூங்குங் குற்றாலம்**
**மூதூரிலங்கை முட்டிய கோனை மிறைசெய்த**
**நாதன் மேய நன்னகர் போலுந் நமரங்காள்**
***திருஞானசம்பந்தர்1 99–8***
**இறவாமே வரம்பெற்றே னென்று மிக்க**
**இராவணனையிருபது தோள் நெரியவூன்றி**

**உறவாகி யின்னிசை கேட்டிரங்கி மீண்டே**
**யுற்றபிணி தவிர்த்தருள வல்லான் தன்னை**
**மறவாதார் மனத்தென்றும் மன்னினானை**
**மாமதியம் மலர்க் கொன்றை வன்னி மத்தம்**
**நறவார்செஞ் சடைடடடடயானை நள்ளாற்றானை**
**நனடியேன் நினைக்கப் பெற்றுய்ந்தவாறே**
**- திருநாவுக்கரசர் 6-20-10**

இராவனாந்தகன் என்றழைக்கப்படும் இராமனது சரம் இலங்கையர்கோனது உடலைச்சல்லிடைக் கண்களாய்த் துளைத்தது மட்டுமன்றி சீதாபிராட்டி பற்றிய எண்ணத்தை எங்கே சிறை வைத்திருக்கிறான் என்பதை இராவணனது உடல் முழுமையும் தடவிப் பார்த்ததென்பதைக் கூறிய கம்பன் இராவணனது தவவலிமையையும் புயவலிமையையும் சிறப்பிக்க **கைலையை எடுத்த இராவணன் என்று** கூறுகின்றார்.

**வெள்ளெருக்கம் சடைமுடியான் வெற்பெடுத்த**
**திருமேனி மேலுங்கீழும்**
**எள்ளிருக்கும் இடமின்றி உயிர் இருக்கும்**
**இடம்நாடி இழைத்தவாறோ**
**கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை**
**மனச்சிறையில் கரந்த காதல்**
**உள்ளிருக்கும் எனக்கருதி உடல் புகுந்து**
**தடவியதோ ஒருவன்வாளி**
**-இராமயணம் யுத்தகாண்டம்.**

அப்பர் பெருமான் அருளிய் போற்றித்திருத்தாண்டகம் பக்தி நரம் கனிந்தவை. அப்பாடல்களில் ஒரு பதிகம் ஸ்ரீகயிலாயம் பற்றி வரகிறது. 90 போற்றிகள் அமைந்துள்ளன. ஈற்றடி கயிலை மலையானே போற்றி போற்றி என வருகிறது

**பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி**
**பாவிப்பார் பாவமறுப்பாய் போற்றி**
**எண்ணுமெழுத்தும் சொல்லானாய் போற்றி**
**என்சிந்தை நீங்கா விறைவாபோற்றி**
**விண்ணுநிலனுந் தீயானாய் போற்றி**
**மேலவர்க்கு மேலாகி நின்றாய் போற்றி**
**கயிலைமலையானே போற்றி போற்றி**
**கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி**

நாவுக்கரசப் பெருமான் கைலைநோக்கிச் சென்ற வேளை உடல் தேய்ந்த நிலைகண்ட எம்பெருமான் அவருக்கு திருவையாற்றில் காட்சி கொடுத்த வரலாறு மிக உணர்வு பூர்வமானது . கைகாணல் கஷ்டமென்ற ஆண்டவன் நோக்கை- மறுதலிப்பது போன்று-கைலை கண்டல்லால் மீளேன் என்னும் வைராக்கிய உறுதி நமக்கோர் அறிவுறுத்தல் எனலாம்.

**மீளும் அத்தனை உமக்கினிக்கடன் எனவிளங்கும்**
**தோளும் ஆகமும் துவளுமுந் நூல் முனி சொல்ல**
**ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டல்லால்**
**மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன் என மறுத்தார்**

பெரியபுராணம் (திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்) திருஞானசம்பந்தப் பொருமானின் இரு பதிகங்கள் திருக்கைலைபற்றி வருகின்றன.

**தாதார் கொன்றை தயங்கு தயங்கு முடியார்**
**முயங்கும் மடவாளைப்**
**போதார் பாகமாகவைத்த புனிதர் பனிமல்கும்**
**மூதாருலகின் முனி வருனா யற நான்கருள் செய்த**
**காதார் குழைய வேதத்திரளர் கயிலை மயைாரே**

**அண்டர்தொழு சண்டிபணி கண்டடிமை**
**கொண்டவிறை துண்ட மதியோடிண்டைபுனை**
**வுண்ட சடைமுண்டதர சண்டஇருள்**
**கண்டரிடமாம்**
**குண்டமண வண்டரவா மண்டைகையிலுண்டுளறி**
**மிண்டுசமயம்**
**கண்டவர்கள் கொண்டவர்கள் பண்டுமறியாத**
**கயிலாயமலையே.**

இப்பதிகங்கள் 68 ஆக அமைந்தமையுமொரு சிறப்பே. இனித்திருவாசக வாக்கில் அமைந்த இடங்களையும் கவனித்து இக்கட்டுரையைப் பூர்த்தி காண்போம்.

**ஒலிதரு கைலை உயர்கிழவோனே**
**கீர்த்தித்திரு அகவல் 146**

கயிலையில் நிரந்தரமாய் இடையறாதிருந்து அருள்பாலிப்பவனே சுன்னாகத்தான்.

வெள்ளியங்கிரி வெள்ளி மலையெனப்படும்(சுன்னாகம்) கைலையை அருணகிரிப் பெருமான் வெளுத்த பொருப்பு எனப்பாடியுள்ளார்

**மிகைத்த புனத்திலிருத்தியனைத்து**
**வெளுத்த பொருப்பி லுறைநாதா**

**விரித்த சடைக்கு ளொருத்தியிருக்க ம்ருகத்தை யெடுத் தொர் பெருமாளே**

**– திருப்புகழ் 230**

சுந்தரர் திருக்கைலாய மலையை நொடித்தான் மலையெனவும் சிவபெருமானை நொடித்தான் மலை உத்தமன் என்றும் பேசுகின்றார். இத்திருப்பதிகமே தேவாரத் திருமுறைகளின் ஈற்றுப்பதிகமும் சுந்தரரின் இறுதிப்பதிகமுமாகும். இந்திரன் மால்பிரமன் எழிலார் மிகு தேவரெல்லாம் வந்தெதிர் கொள்ள என்னை மத்தயதனை யருள் புரிந்து மந்திரமாமுனிவ ரிவரென எம்பெருமான் நந்தமர் ஊரனென்றான் நொடித்தான் மலைத்தமனே சந்தனாசிரியர் எல்லாம் திருக்கலைாய ஞான பரம்பரை என்றழைக்கப்படுவதும் இங்கே நோக்கத்தக்கது. கைலாசநாதருக்குத் திருக்கோயில் காஞ்சியில் உண்டு. முடிவிலாதுறை சுன்னாகத்தானுக்கு சுன்னாகத்தில் ஒரு ஆலயம் உண்டு இதுவே கதிரைமலைச்சிவன் கோயிலாகும் சுன்னாகம் குமாரசாமிப்புலவர் ஜனன பூமியும் இதுவே.

இறைவனை உணர சாதனை புரியவேண்டும். வெறும் சாத்திரப் படிப்பு பயன் படாது. வித்யாசாகரைப் பார்த்த அளவிலேயே அதிகம் படித்திருக்கிறார் என்று தெரிந்தது. ஆனால் தான் யார் தன்னுள் என்ன இருக்கிறது ஒன்றும் அறியார்.பள்ளிகள் வைத்துப் பாடங்கள் சொல்லிக் கொடுப்பதிலே மனம் மகிழ்ந்தாரேயொழிய இறைவனுடைய ஆனந்தத்தின் ருசியை அறிந்தாரில்லை. வெறும் படிப்பினால் எதனைச் சாதிக்க முடியும்? படிப்பினால் உட்கருத்தைக் கிரகித்துக் கொள்ளவேண்டும். பஞ்சாங்கத்தில் இருபதங்குல மழை என்று எழுதியிருக்கிறது என்பதற்காகப் பஞ்சாங்கத்தைப் பிழிந்தால் மழை ஒரு துளியாவது பெய்யுமா?

ஸ்ரீ ராமகிருஸ்ணர்

## இறைவன்

உள்ளன்போடு இறைவனையடைய எவன் விரும்புகின்றானோ அவன் நிச்சயமாக இறைவனைக் காண்பான். கண்டேயாகவேண்டும். இறைவனைத்தவிரவே ஒன்றையும் எவன் விரும்புவதில்லையோ எவனிடம் இறைவனைக் காணும் உள்ளத் துடிப்பு ஏக்கம் இருக்கிறதோ அவன் கண்டிப்பாக இறைவனைக் காண்பான்.

ஸ்ரீ ராமகிருஸ்ணர்

## முத்திக்கு வழி

முத்திக்கு வழியை
மொழியக் கேண்மோ!
சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்திய வத்து விவேகம்
பத்திசெ யடியாரைப் பணிதல் பகலவன்
எழுமுன் எழுதல் இரும்புனலாடல்
வழுவிலைந்தெழுத்தும் வரன் முறை
பயிலல் குரு பதம் பணிதல்
கோலநீறணிதல் வரும் பசிக்குண்ணல்
வாயுற வாழ்த்தல்
சாத்திரம் பயிலல் தன்போற் பிறரையும்
பார்த்தல் பணப்பற்றொழித்தல்
பண்புடன்
வார்த்தையாடல் லாதனை தீர்த்தல்
கோத்திரங் குலமெனுங்
கோட்பாடொழித்தல்
எட்டுணையேனும்
வேண்டுதல் வேண்டாமை யின்றி
என்றும் ஆண்டவனடிக நீழமர்ந்து
வாழ்தலே

**–யாழ்ப்பாணத்து சிவயோகசுவாமிகள்–**

# மனத்தின் பலமே வாழ்வின் பலம்

மன உறுதியும் இனிய சொற்களுமே வாழ்வின் தீபங்கள். மன அமைதியும் கட்டுப்பாடான வாழ்க்கையும் தான் வாழ்வின் வழிகாட்டிகள்
மனதிற் தெளிவு இருந்தால் மயக்கங்கள் மறையும். அர்த்தங்கள் யாவையுமே தெளிவாகப் புலப்படும்
நெஞ்சில் மன உறுதியும் உதட்டில் புன்னகையும் உரைக்கும் சொல்லில் இனிமையும் இருந்தால் வாழ்வில் சுபீட்சம் மலரும்
மனக்கிலேசம் அடைபவனுக்கு இம்மையும் இல்லை மறுமையும் இல்லை.
மனதை ஒருமுகப்படுத்துதல் உலக காரியத்திற்கும் பயன்படும் பரமார்த்திகப் பெரும்பேறு பெறுவதற்கும் பயன்படும்.
மனம் குவியும்போது எதை எண்ணுகின்றோமோ அதன் பாவனையை அது விரைவில் எடுக்கிறது.
மன அமைதியில் மனிதனது துன்பங்கள் எல்லாம் ஒழியும் பற்றற்று பயமற்று சினமற்று இருக்கும் மனதே சீரிய மனமாகின்றது.
மனிதனுடைய பாவ புண்ணியங்கள் அவனுடைய மனநிலையைச் சார்ந்துள்ளன.
மனம் தான் எல்லாம். அது தனது சுயேட்சையை இழக்குமானால் நீயும் உன் சுயேட்சையை இழப்பாய்.
மனிதன் மனம் வைத்தால் கல்லும் கவிபாடும். இரும்பும் நடமாடும்
அலைமோதும் உள்ளத்தில் உணர்ச்சி மட்டுமே பிரவகிக்கின்றது. அன்றி நிதானமான சிந்தனையின் தெளிவு அங்கு அருகிக்கிடக்கின்றது..

when there is righteousness in the heart
there is beauty in the character
when there is beauty in the character
there is harmony in the home
when there ia harmony in the home
there is order in the nation
when there is order in the nation
there is peace in the world.
- sri sathiya saibaba.

That little egoism.............
his mind like a beacon on a focussed meditation
cross legged sat brahma the lord of creation
he first created `aum'the eternal cosmic vibration!
it hovered round brahma-that devine intonation!!
Vishnu the protector plucked four petals
from his favourite garland came the four petals
make the scripts known he gave Brahma the petals.
The very ancient vedas-floated iut from the petals.....!!
shocked by their incandescence, the creator thought
I brought the vedas,with my own very thoughts!
am I not mighty?? He pondered at that thought,
Brahma lost him self by this egoistic little thought!!
Egoism is some thing which one should reach
t contradicts the basic lines the vedas preach
Vishnu was purtutbed had a lesson to teach
flash...! went the phillosophy from brahma's reach
His mind become vacuum-all his devine thinking gone!
Gone were the Hindu scriptures the vedas were gone!
He sat in self penance and for long years he mourned
Meditating on Vishnu the most compassioate known!!
Move by his penance, vishnu appeared before him
If you need the vedas back humbly approach him,
for maheshwara is the supreme one! vishnu told him
Back to his pennce, sat for years seeking him.......
Brahma sat in meditation on the cosmic supreme guru.....
Maheswara, the satguru the ultimate guru of gurus
Appeared as Dhakshinamoorthy, Brahma's vedic guru revealed those lost vedas! this super-devine guru!!
Embodiment hindu phillosophy are these four vedas
Numerous are the stories as to the origin of the vedas
who sponsored to mankind these four hindu vedas??
the accepted answer-the hindu trinity of the vedas!!

**-சிவா விமலேஸ்வரன்-**
scarborough canada

# MARKANDAN & CO

## SOLICITORS

**Empowered to Administer Oaths**

Legal Aid

**THAMIL HOUSE**
**720 ROMFORD ROAD**
**MANOR PARK**
**LONDON E12 6BT**

## M. MARKANDAN LLB

* All aspects of immigration matters from appeals to European court of human rights
* All types of conveyancing* Litigation * All courts civil/criminal
* Landlords/Tenant matters * Matrimonial * Police station advice
* All D.S.S and housing benefit matters
*Free advice for 15 minutes on the first attendance

**LEGAL AID**

**TEL : 020 8514 8188 FAX : 020 8514 8303**

# RANI FASHIONS

Specialist in Wedding Sarees, Suits, Children Wears



சேலைத் தெரிவுக்கு தெரிவு செய்யுங்கள்
ராணி பாஷன்ஸ்
கிழக்கு இலண்டனில் அனைத்துக் கொண்டாட்டத்திற்கும்
தேவையான பல வண்ணங்களில் பற்பல நவீன ரக
சேலைகளை
அள்ளி அணிய ஓடோடி வாருங்கள்
ராணி பாஷன்ஸ்
கொள்ளை மலிவில் கொள்வனவு செய்யுங்கள்
ராணி பாஷன்ஸ்
எடுப்பான மேனிக்கு மேலும் அழகு சேர்ப்பது
ராணி பாஷன்ஸ்

302 High Street North,
Manor Park, London E12 6SA

**Tel/ Fax 020 8472 9970**
**Mobile: 0958 504 118**

# திருமந்திரம்

**எமது இறைவன்**

1. சக்தியோடு இணைந்து **இரண்டாகவும்** உயிர்களைப்படைத்துக் காத்து அழிக்கும் தொழில்களைப் புரிதலால் **மூன்றாகவும்** **நான்கு** வித புருஷார்த்த நிலைகளை உணர்ந்தவனாகவும் மெய் வாய் கண்மூக்கு செவி அகிய **ஐந்து** இந்திரியங்களை வென்றதாகவும் **ஆறு** ஆதாரங்களிலே பரவியதாகவும் **ஏழு** வகையான உணர்வுகளில் வாழ்பலராகவும் நிலம் நீர் தீ காற்று வீண் சூரியன் சந்திரன் ஆன்மா ஆகிய **எட்டுப்** பொருள்களையும் உணாந்ததாகவும் உள்ளவரே எமது இறைவராகிய சிவம் ஆவா்.

2 சிவம் தான் இப்பூவுலகத்தைத் தாங்கிக்கொண்டு ஆகாய வடிவினதாக உள்ளது.

3 சூரியனாகவும் சந்திரனகவும் நெருப்பாகவும் சிவமே உள்ளது.

4 அருள் தரும் சக்தியாகவும் சிவமே உள்ளது.

5 விசலமான மலையாகவும் குளிர்ச்சியான கடலாகவும் சிவமாகிய இறைவனே உள்ளார்.

6 கடல் சூழ்ந்த இவ்வுலகம் இறைவன் விதித்த முறையின்படி நடப்பதன்றி வேறு முறைகளால் அல்ல.

7 இல்லறத்திலிருந்து இறைபணி செய்பவர்கள் பெரிய தவத்தை உடையார்க்கு ஒப்பாவர்.

8 பனை மரத்தில் உள்ள பருந்து உணவுக்காக வெளியே வரும் நேரத்தை விட பனையிலே ஒடுங்கியிருப்பது போல உலக வாழ்க்கையில் ஈடுபட்டு மற்ற நேரங்களில் இறைவனை நினைத்திருத்தல் இல்லறத்தாரின் உரிய பணியாகும்.

9 ஞர்ன சொரூபியாய் எம் மனத்தில் எழுந்தருளியிருப்பவன் அழிவில்லா இறைவனே.

10 காலையும் மாலையும் பின்வருமாறு இறைவனைத் துதித்துக்கொள்வோம்

**மனதினுள் நிறைந்திருக்கும் இறைவனது**

**திருவடியியைச் சிரசில் சூடிக்கொள்வேன். தலைவா என்று பாடுவேன் பல மலர்களை அர்ச்சித்து வணங்கி நிற்பேன். என் இறைவனே தேவதேவன் என்று வணங்குவேன்.**

11. வேதத்தில் சொல்லப்படாமல் விட்டுப்போன நீதி ஒன்றும் இல்லை.

12 நாம் ஓதத்தக்க நீதிகள் எல்லாம் வேதத்தில் உள்ளன.

13 வேதத்தை ஓதுவதன் மூலம் முதியடையலாம். வேதங்களை ஓசையளவில் எடுத்துக் கூறுபவர் வேதத்தை அறிந்தவர் ஆகார்.

14 உள்ளத்தை உருக்கி உணர்வாக இருக்கும் மந்திர வடிவான அழகிய வேதத்தின் பொருள் இறைவனே ஆவா்.

15 தெய்வீக நெறியாவது குரு அருளால் சிவத்தின் பாதக்கமலங்களை அடையும் நெறியாகும்.

16 சிட்சை கற்பகம் வியாகரணம் சந்தோவிசிறி சோதிடம் நிருத்தம் ஆரிய ஆறங்கங்களாகக் கொண்டது வெதம் ஆகும்

17 இறைவனால் அருளப்பட்ட ஆகமங்கள் இருபத்தெட்டு உள்ளன.

18 சிவாகமத்தை அனுபவித்தெ அறிதல் வேண்டும் அல்லது அவை நீரின மேல் எழுத்துப் போல் பயனற்றவையாகி வீடும்.

19 இறைனால் அருளப்பெற்ற சிவாகமங்கள் கணக்கற்ற கோடிகளாக இருப்பினும் இறைவன் சொன்ன உண்மைப் பொருளை உணராவிடின் அவை அனைத்தும் நீர் மேல் எழுத்துப்போற் பயனற்றவையாகும்

(இன்னும் வரும்.....)

# சங்கத்தமிழர் இசையில் யாழின் பங்கு

**-தமிழரசி-**

அ,,,,,,,,,,,,,,,,,,,ஆ ஆகும் பொழுது இசை தோன்றி விட்டது. அதாவது குற்றெழுத்து நெட்டெழுத்தாக மாறுகையில் இசை பிறக்கின்றது.

இதனை தொல்காப்பியர்

**அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்**
**உளபென மொழிப இசையோடு சீவணிய**
**நரம்பின் மறைய என்மனார் புலவர்**
**(தொல்காப்பியம் பொருளதிகாரம் நூல்மரபு33)**

எனக் குறிப்பிடுகின்றார். சங்கத்தமிழ் இலக்கண ஆசிரியரான அவரும் நரம்பின் மறைய என்மனார் புலவர். எனத்தமக்கு முன் வாழ்ந்த யாழ் இலக்கணப்புலவர்கள் கூறுவர் என்றே சொல்கின்றார். சங்க காலத்திற்கு முன்பே தமிழிசை தோன்றி யாழ் இலக்கணமும் உருவாகிவிட்டது என்பது இதனால் அறியப்படுகின்றது. பழங்காலத் தமிழரிசையில் யாழுக்கு மிகச்சிறப்பான இடம் கொடுக்கப்பட்டிருந்ததை சங்கத் தமிழ்ச்சான்றோர்கள் எமக்குக் காட்டுகின்றார்கள். பரிபாடல் ஓர் இசைத்தமிழ் நூலாதலால் யாழிசை பற்றி பல இடங்களில் கூறுகின்றது. பாட்டிற்கு சுருதி மிக மிக அவசியம் யாழிசைக்கு அடிநிலை ஒலியாக(ஆதார சுருதியாக) குழல் இருந்ததை 7ம் பரிபாடல் கூறுகிள்றது.

**புரிநரம்பு இன்கொளை புகல் பாலைஏழும்**
**எழூப்புணர் யாழும் இசையும்கூட**
**குழலளந்து நிற்ப முழவெந்தார்ப்ப**
**(பரிபாடல் 7 77 79)**

யாழிசையும் பாட்டிசையும் ஒன்று சேர குழல் சுருதியாக அமைந்ததை குழல் அளந்து நிற்ப என்றுமையோடக் கோவனார் கூறுகிறார். இதனால் முதற் கருவியாக யாழும் துணைக்கருவியாக கழலும் இருந்ததை நாம் அறியலாம்.

பரிபாடல் நான்கு பாடலுக்கு இசையமைத்த சங்ககால இசை அறிஞர்கள் நல்லச்சுதனார் தாம் இயற்றிய பாடலில˙(இப்பாடலுக்கு இசையமைத்தவர் கண்ணகனார்)

**விரல் செறி தூம்பின் விடுதுளைக் கேற்ப**
**முரல் குரல் தும்பி அவிழ் மலர் ஊத**
**யாணர் வண்டினம் யாழிசை பிறக்கப்**
**பாணி முழவிசை அருவி நீர் ததும்ப**
**ஒருங்கு பரந்தவை எல்லாம் ஒலிக்கும்**
**இரங்கு முரசின் குன்று**
**(பரிபாடல் 21–33–38)**

துளைகளையுடைய புல்லாங்குழல் ஓசையைப்போலத் தும்பிகள் மலர்களில் ஊதின அதைச் சுருதியாகக் கொண்டு வண்டினங்கள் யாழினது இசையை உண்டாக்க அருவியின் நீர் தாள முழவினைப் போல் ஒலித்தது. இவ்விதமான எல்லா ஒலிகளும் திருப்பரங்குன்றில் எழுந்தன என்கிறார்.

புல்லாங்குழலே சங்கத் தமிழிசைக்கு ஆதார சுருதியாக அமைந்ததை இளங்கோ அடிகளும் சிலப்பதிகாரத்தில்

**குரல் வழி நின்றது யாழே யாழ்வழி**
**தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்**
**பின் வழி நின்றது முழவே (சிலம்பு 3 139 141)**

என விளக்குகின்றார்.

ஆசிரியர் நல்லந்துவனார் ஏழு துளைகளையுடைய குழலிலும் ஐந்து துளையுடைய குழலிலும், யாழிலும் பிறந்த இசையைப்போலவே தும்பியும் வண்டும் தேனீயும் ஒலி எழுப்பியதாகக் கூறி மூன்று இசைக்கருவிகளின் ஒலி வேறுபாட்டை தும்பி வண்டு மிஞிறு(தேனீ) என்பவற்றுடன் ஒப்பிட்டுக் காட்டுகின்றார்.

**ஏழ்புழை ஐம்புழை யாழிசை கேழ்த்தன்ன இனம்**
**வீழ்துழ்பி வண்டொடு மிஞீறார்ப்ப.**
**பரிபாடல் (8 22 23)**

ஒரே ஒலி வெவ்வேறு இசைக்கருவிகளுக்கு ஏற்ப இசை உணர்வை வேறு படுத்துவதை பூச்சிகளை உவமையாக்கிக்காட்டி விளக்கும் பான்மை போற்றுதற்கு உரியது.

இவ்வாறு யாழின் சிறப்புக் கூறும் பரிபாடல் தேவருலகையும் வேண்டாம் எனக்கூறி திருப்பரங்குன்றத்து மக்கள் யாழிசை கேட்டு

மகிழ்ந்ததை எமக்குச் சுட்டிக்காட்டுகிறது

**மேலாருறையுளும் வேண்டுநர் யார்**

**ஒருதிறம் பாணர் யாழின் தீங்குரல் எழ**

***( பரிபாடல் 17 8 9 )***

ஒரு பக்கம்ப ாணரின் யாழின் இனிமையான இசை எழுந்தால் மேலுலக வாழ்வை வேண்டப்போவது யார்? என்று கேட்கின்றார் நல்வழி ஆசிரியர்.

சங்கத்தமிழரின் வீரவரலாற்றைக் கூறி எமக்கு அஞ்சா நெஞ்சமும் மான உணர்வும் நாட்டுப்பற்றும் தருவது புறநானூறு. புறநானூறு வீரர்களுக்கு வீரம் சேர்த்தது. தமிழிசையினுள் யாழிசை அதிற் பெரும்பங்கு வகித்திருக்கின்றது.

போர் முடிந்து தமிழ் வீரர்கள் வெற்றியோடு வீடு திரும்பிக்கொண்டிருக்கிறார்கள்.

அந்த நகரமே மகிழ்ச்சியோடு இருக்கின்றது. பெண்கள் மனநிலையோ வேறு விதமாக இருக்கின்றத. எத்தனை பேர் குற்றுயிராக வருவார்கள? கையிழந்து கால் இந்து எத்தனை பேர் வருவார்கள்? இறந்தவர்கள் எத்தனை பேர்? வீட்டுக்கு வீடு பெண்களின் மனநிலை வித்தியாப்படுகின்றது,

அன்பான தோழியே ! இவன் வேந்தனுக்கு உற்ற துன்பம் தீர்த்த பெருந்தகை. வீரநடை நடந்து வரும் இவன் போரில் காயப்பட்டுள்ளான். இரவு இலையும் வேப்பிலையும் வீட்டிலே செருகி யாழொடு பல இசைகளும் இசைக்க கண்ணுக்கு மையெழுதி வெண்கடுகு சிதறி ஆம்பற் பண்பாடி வீடெல்லாம் அகிற்புகை இட்டு இவனைக் காப்போம் வருவாய் என்று ஒரு தலைவி அழைப்பதாக புறநானூற்றில் அரிசில் கிழார் எமக்கு ஒரு காட்சியைக் காட்டுகிறார்.

தீங்கனி இரவமொடு வேம்புமனைச் செரீஇ

வாங்கு மருப்பு யாழொடு பல்லியம் கறங்க

(புறநாநூறு 281 1-2)

பல்வகை வாத்திய இசைகள் (பல்லியம்) யாழிசைக்கு துணையாக அமைவது யாழின் தனிச்சிறப்பைப் புலப்புடுத்துகிறது. அத்துடன் யாழிசை புண்ணின் வேதனையைப் போக்குகின்றது. போர் வீரரைக் காப்பாற்ற உதவியிருக்கின்றது என்பதை இப்பாடல் எமக்கு அறியத்தருகின்றது.

கொடைவள்ளல்கள் முன் பரிசில் பெறச்செல்வோர் யாழிசைத்துச் சென்று பரிசு பெற்றதை கபிலர் மிக அழகாகச் சொல்கிறார்.

பாரி பெரிய கொடைவள்ளல் சங்கச்சான்றோரால் போற்றப்பட்டவன். அவனோ புறம்புமலைச ்சிற்றரசன். மூவேந்தர்களான சேர சோழ பாண்டியர்க்கு பாரியின் சிறப்பு பொறாமையைத் தந்தது. மூவேந்தரும் சேர்ந்து புறம்புமலையை முற்றுகையிட்டனர். இதனைப் பார்த்த கபிலர் மூவேந்தர் முன் சென்று. நீவீர் மூவரும் சேர்ந்து பாரியை வெற்றி கொள்வது இயலாத காரியம். அவனை வாளால் வெல்லவே முடியாது அவனின் நாட்டைப் பெறும் வழி எனக்குத் தெரியும் அது எப்படி என்றால் சீறியாழை வாசித்துக்கொண்டு விறலியர் பின்னே வர ஆடிப்பாடிச் சென்றீர்களேயானால் நாட்டையும் காட்டையும் மலையையும் ஒன்றாகத்தருவானே என்கிறார்.

**தாளின் கொள்வீர் வாளின் தாரலன்**

**யான் அறிகுவன் அது கொள்ளும் ஆறே**

**சுகிர் புரி நமைப்பின் சீறியாழ் பண்ணி**

**விரையொலி கூந்தல் விறலியர் பின்வர**

**ஆடினீர் பாடினீர் செலினே**

**நாடும் குன்றும் ஒருங்கு ஈயுமே**

**(புறநாநூறு1109 13 18)**

மூவேந்தர்களையே சீறியாழ் வாசித்து பரிசு பெறுமாறு கூறுவதில் இருந்து யாழிசையின் பெருமையும் ஆற்றலும் நன்கு விளங்குகின்றது.

போரினைத் தடுக்க பாரியிடம் மூவேந்தர்களை யாழிசைத்துச் சொல்லச் சொன்ன கபிலர் இன்னொரு கொடைவள்ளலான போகனிடம் சென்று

மயில் பனியால் நடுங்குமென போர்வை அளித்த புகழுடைய போகனே! கேள்! நாம் பசித்து உம்மை நாடிவரவில்லை. எமக்குப் பாரமாகச் சுற்றமும் இல்லை. சீறியாழை இனிதாக இசைத்து அறம் செய்வாய் அருள் செய்வாயென உன்னிடம் இரக்கும் பரிசு என்ன வென்றால் இன்று இரவே உன் தேர் ஏறிச்சென்று பார்க்க சகிக்க முடியாத நிலையில் வாழும் உன் மனைவியின் துன்பத்தை தீர்ப்பாயாக. இதுவே நான் உன்னிடம் விரும்பும் பரிசு என்கிறார்.

**களங்கன்னி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்**

**நயம்புரிந் துறையுநர் நடுங்கப்பண்ணி**

**அறம் செய்தீமோ அருள்வெய்யோய் என**

**இஃதுயாம் இரந்த பரிசில் அஃது இருளின்**

**இனமணி நெடுந்தேர் ஏறி**

**இன்னாது உறைவி அரும்படர்களைமே,.**

**(புறநாநூறு 145 5 10)**

# இருள் அகல இடர் விலக ஏற்றுக சிவக்கொடி!!

அடியார்க்கடியான் .

சிவாலயம் விராட்புரடனின் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. சிவமாகிய இறையுடன் சீவனாகிய ஆன்மா இரண்டறக் கலக்கும் இடம் என்ற காரணம் பற்றியே சிவாலயம்(சிவ ஆலயம்) எனப்பட்டது. இங்கு கர்ப்பக்கிரகமாகிய மூலஸ்தானத்தில் இறைவன்( இலங்கு-பிரகாசிக்கும்) ஆத்ம இலிங்கரூபமாக அமைந்து காட்சி அழிக்கிறார். இவருக்கு பூசை புனஸ்காரம் ஆராதனை அபிடேகம் முதலியவை மூலம் தொழுகை நிகழ்கிறது. தொழுதல் என்றால் எமது திரிகணங்களாகிய மனம் வாக்கு காயம் மூன்றும் ஒன்று படுதல் என்று பொருள்.

சிவாலயத்தில் சிறப்பான தினங்களிலும் வருடமொரு முறையும் உற்சவங்கள் நடத்தப்படுகின்றன. இக்காலங்களில் ஆலயத்தம்பத்தில் கொடி ஏற்றப்படும். இது மூலமூர்த்தியின் ஆற்றல் பண்பு முதலியவற்றை வெளிக்காட்டும் ஊடகமாக அமைகிறது. இவ்வாறு சிவனுக்குரியதாக சிவாலயங்களில் ஏற்றப்படும் கொடி நந்திக்கொடி. இக்கொடிஏற்றம் சிவதத்துவத்தையும் அதன் பண்புகளையும் மக்களுக்கு விளக்குமுகமாக அமைக்கப்பட்ட கிரிகை. சீவர்களாகிய எம்மிடம் இரண்டு முரண்பாடான தன்மைகள் இருக்கின்றன. ஒன்று ஒளிமயமான பகுத்தறிவு. மற்றது ஆணவம் கன்மம் மாயை எனும் இருள் மயமான மும்மலங்கள். இவையிரண்டும் ஒன்று வலி கூடும் போது மற்றது மறைவதும் மற்றதன் வலி கூடும் போது முன்னது மறைவதும் ஆன இயல்பைக் கொண்டு விளங்குகின்றன.

சிவமாகிய மெய்யறிவு எம்மிடம் பிரகாசிக்கும் போது ஆணவம் முதலாம் மலங்கள் அழிந்து விடுகின்றன. ஆனால் மலங்கள் எம்மை பற்றியிருக்கும் போது மெய்யறிவு அழிவதில்லை. அது ஒளிந்து திருக்கும் சூரியனை மறைக்கும் மேகம் போல மல உபாதை அகன்றதும் சிவம் மீண்டும் பிரகாசிக்கும். மெய்யறிவு

என்பது என்ன ? அது புகட்டும் மெய்ப்பொருள் எது? அப்பொருளினின்றும் வெளிப்படும் அருட்சக்தி எது? அவ்வருட்சக்தியைக் காணக்கூடிய கண் எது? அக்கண்ணில் மெய்யறிவைத் தோற்றாது தடுக்கும் இருள் எது? என்ற கேள்விக்கு விடையாக நிற்பது சிவமாகிய மெய்ப்பொருளே.

அந்த மெய்ப்பொருளாகிய சிவத்தை எமது மன வாக்குக் காயங்களால் முயன்று தேடினாலும் காணவோ அறியவோ முடியாது. எம்முடன் இரண்டறக்கலந்து நிற்கும் அவனை வெளியிலும் தேடி அறிய முடியாது . அவனை அறிய அவன் அருளாகிய திருவருளே வேண்டும். அத்திருவருளாக வருபவனே குரு. அவன் மறைபொருளாக விளங்கும் ஊமை எழுத்தையும் பேசும் எழுத்தையும் உணர்த்துவான். அவன் உணர்த்தினால் பஞ்சாட்சரம் அட்டாட்சரம் சச்டாச்சரம் சதுராட்சரம் ஏகாட்சரம் முதலியவற்றினதும் பொருள்கள் துலங்கும். மெய்ப்பொருள் துலங்கினால் நாம் சிவமயமாக மாறலாம்.

அத்திருவருளாக குருவருளாக விளங்குபவன் நந்தியம்பரனே, அவன் எமக்கு ஞானத்தையும் தெளிவையும் தரவல்லவன். அதனாலே சிவக்கொடி நந்தியாகிய திருவருளைக் குறித்து நிற்கிறது.

சிவமே பொருளெனத் தேற்றி என்னைச்
சிவவெளிக்கேற்றும் சிகரத்தில் ஏற்றிச்
சிவமாக்கிக் கொண்டது பாரீர்-திருச்
சிற்றம்பலத்தே திரு நடஜோதி.

என்று சிற்றம்பலமாகிய தில்லை அம்பலத்தில் நின்று ஆடிப்பறந்து பிரகாசிக்கின்ற நந்தி எம்பெருமான்

தன்னை சிவமாக்கி விட்ட பேற்றினை உருகிப் பாடுகின்றார் வள்ளல் பெருமான்.

இத்தில்லையம்பதியில் இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் உமாபதி சிவம். அவர் தில்லை

மூவாயிரவருள் ஒருவர். மறைஞான சம்பந்தர் என்ற ஞானியின் தொடர்பால் ஆணவமாகிய மூல இருள் நீங்கப்பெற்றவர். இருள் நீங்கப் பெற்றதனால் யாவிலும் யாவையும் சிவமாகக் காணும் ஆற்றலைப் பெற்றார். ஒரு நாள் மறைஞர்ன சம்பந்தர் தம் குடிப்பிறந்த ஒருவர் வீட்டில் உணவாக உப்பில்லாக் கஞ்சியை வாங்கி அருந்தினார். அப்போ அவரது கை வழியாக வழிந்த கஞ்சியை பிரசாதமாக ஏந்தி அருந்தினார் உமாபதிசிவம். அதனால் அவரை தில்லை மூவாயிரவர் சாதிப்பிரஸ்டம் செய்தனர். தில்லையம்பலத்தினுள் நுழையவும் அனுமதிக்கவில்லை.

உமாபதிசிவம் எவ்வித சலனமுமின்றி ஒரு மடத்தே சென்று தவம் இயற்றலானார். அவ்வாண்டு மார்கழி உற்சவத்திற்கு கொடியேற்ற வேண்டிய நாள் வந்தது. தில்லை மூவாயிரவர் யாவரும் சேர்ந்து முயன்றும் கொடி ஏற்ற முடியாது போயிற்று. ஏதும் குற்றமாக இருக்கலாம் என எண்ணி தில்லைக்கூத்தனிடம் இறைஞ்ச உமாபதிசிவத்தைக் கொண்டு ஏற்றுவீர் கொடி என அசரீரி கேட்டது. அது கேட்டு அந்தணர்கள் தாம் செய்த தவற்றை உணர்ந்து வருந்தி உமாபதி சிவத்திடம் ஓடிச்சென்று தம் செயலுக்கு மன்னிப்புக் கேட்டு அவரை வந்து

கொடியை ஏற்றி வைக்க வேண்டியதோடு இறைவ னின் அசரீரி பற்றியும் கூறினர்.

உமாபதி சிவமும் அழைப்பை ஏற்று சிற்றம்பலம் ஏகி தம்பத்தின் தென் புறமாய் நின்று இறைவனை வணங்கி அறியாமை இருளில் ஆழ்ந்து மெய்ப் பொருளை உணராதிருக்கும் மக்களுக்கு மெய்ப் பொருளை உணர்த்தவும் பூரணநிலை அடையவும் வேண்டி இக்கொடியை ஏற்றுகிறேன் எனும் பொருள் பட நான்கு கொடிக்கவிகளைப் பாடினார். முதல் பாடல் பாடிய மாத்திரத்தே கொடி எவ்வித முயற்சியும் இன்றி தம்பத்தின் உச்சிக்கு ஏறிச்சென்று ஆடிப்பறந்தது.. அவர் பாடிய முதற்பா இது.

**ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் ஒன்று மேலிடில் ஒன்று**

**ஒளிக்கும் . எனினும் இருள் அடராது. உன் உயிர்க்குயிராய்**

**தெளிக்கும் அறிவு திகழ்ந்துளதேனும் திரிமலத்தே**

**குளிக்கும் உயிர் அருள் கூடும் படி கொடி கட்டினேன்.**

தில்லை வாழ் அந்தணரின் சாதிச் சழக்கையும் ஆணவ

இருளையும் கெடுத்து மெய்ஞானத் தெளிவை அருளி சமரச சுத்த சன்மார்க்கத்துக்கு வழிவகுத்தது நந்திக்கொடி.

முத்தி நிலை அடைந்து தானே அவனாய் அவனே தானாய் விளங்கும் சதாசிவ நிலையை அருள்வது நந்திக்கொடி அந்த ஒருமை நிலையை அடைந்தவர்கள் சிரஞ்சீவிகளாக நெடுங்காலம் வாழ்ந்து விரும்பிய காலத்தில் நிர்விகற்ப சமாதி அடைவார்கள். இவ்வாறு 3000 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து தில்லையம்பலத்திலே சதாசிவ நிலையை அடைந்து சமாதி கொண்டவர் திருமூலர். அவருக்கு அந்த நிலையை அருளியவர் திருநந்திதேவர்.

**வினையின் நீங்கி விளங்கிய அறிவின்**

**முனைவன் கண்டது முதல் நூலாகும்**

என்பது தொல்காப்பியர் வாக்கு. அதற்கமைய திருமந்திரம் எனும் சிவாகமத்தை ஆக்கி எமக்களித்தார் இந்தத்திருமூலர்.

**நந்தி திருவடி நான் தலை மேற்கொண்டு**

**புந்தியினுள்ளே புகப் பெய்து போற்றி செய்து**

**அந்தி மதிபுனை அரனடி நாடொறும்**

**சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேனே**

என்று தாம் சதாசிவ நிலையில் விளங்கிய நந்தி தேவர் அறிவிக்க அதனைச் சிவாகமமாக தந்ததாகக கூறுகிறார். அதுவே தமிழர்களுக்குரிய சிவாகமம்.

ஒரு யோகியானவன் பத்மாசனமிட்டு தவத்தில் இருக்கும் போது அவனது மூலாதாரத்தில்

மூண்டெழும் அனலை சூரியசந்திர கலைகளாகிய சுவாசத்தால் மேல் எழச்செய்து ஆறாதாரங்களிலும் உள்ள தடைகளைக் கடந்து சிதாகாயத்தில் சுழிமுனை வழியே ஏற்றி நிறாதாரத்துள் செலுத்த அது அங்கு ஒளிமயமாகப் பிரகாசிக்கும். இப்படிப் பிரகாசிக்கும் (அனல்) தீ நமது காயக்கோயிலில் பிரகாசிப்பதால் அது ஸ்ரீ நந்தி என்று பெயர் பெற்றது.. இது ஆன்ம தத்துவம்.

இந்த உயர்ந்த தத்துவத்தை விளக்கி நிற்கும் நந்திக் கொடியை சிவக்கொடியாக ஆக்கிவைத்த நம்முன்னோரை போற்றாமல் இருக்க முடியாது. மூதாதையர் எமக்கு அளித்து நாம் அறியாமையால் மறந்து கைவிட்ட இந்த அற்புதமான சிந்தனைக்கு புதுமெருகூட்டி வைத்த உலக சைவப்பேரவைக்கும் அதன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தம்மைமுற்றாக அர்ப்பணித்துக்கொண்டு செயலாற்றும் கொழும்பு சைவமுன்னேற்றச் சங்கத்துக்கும் நந்தியம்பெரமானின் பூரண அருள் கிட்டி சிவமயமாக வாழ வாழ்த்துகிறோம். அவாகள் எமக்களித்த ஒப்புயர்வற்ற மெய்ப்பொருளை அதன் பொருளுணர்ந்து கடைப்பிடித்து வருவோமானால் நாமும் சிவமயமாகி இன்பதுன்பங்களுக்குக் காரணமான பிறவிப்பிணியினின்றும் நீங்கி உய்தி அடையலாம்.

**அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்**
**விண்ணில் அமரர் தமக்கும் விளங்காது**
**அண்ணல் அறைந்த அறிவு அறியாவிடின்**
**எண்ணில் கோடியும் நீர் மேல் எழுத்தே.**

என்ற திருமூலர் வாக்குக்கமைய சிவாகமத்தின் மெய்ப்பொருளை உணர்ந்த சான்றோர்களை அண்டி அதன் மெய்ப்பொருளை உணர்ந்து உய்தி அடைவதே இன்று வேண்டற்பாலது. இன்றைய மாயா வினோத உலகில் பழமையை மறந்து புதுமையில் உழலும் மக்களுக்கு மெய்யறிவை . பிரகாசிக்கச் செய்யும் நந்திக்கொடியை சகல வைபவங்களிலும் ஏற்றிச் சிறப்பிப்பதோடு உமாபதி சிவாச்சாரியார் ஆக்கித்தந்த கொடிக்கவி நான்கையும் பாராயணம் செய்து வருவோமானால் சிவனருளால் இடர்கள் நீங்கும் அகவிருள் அகலும் நாம் அமைதியாக வாழலாம்

*********


# SHIPPING - AIR FREIGHT - TRAVEL

**UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC**

**TO COLOMBO AND OTHER WORLD WIDE DESTINATIONS**

**MAIN AGENT FOR SRILANKAN AIRLINES**

PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE

All Your Goods Go To Our Bonded Warehouse in Colombo

**WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES**

SriLankan

**14 Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ**

SriLankan

# GLEN CARRIERS LIMITED

**Tel: 0208 740 8379/ 0208 749 0595**
**Fax: 0208 740 4229**
**BONDED WARE HOUSE**
**LAKSIRISEVA , 66 NEW NUGE RD, PELIYAGODA**
**TEL: 575576**

## சிறுவர் கலசம்
### வணக்கம்!
### பெற்றார்களே! சிறுவர்களே!

இந்த இதழ் எமது 31 ஆவது இதழ். இம் முறை உங்களுடைய சிந்தனைகளைத் தூண்டக் கூடிய பல கட்டுரைகளை தருகின்றோம். இவை தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ளன.சென்ற கலசத்தில் தொடங்கிய ராமாயணத் சித்தரத் தொடரின் தொடர்ச்சி இம்முறையும் வருகிறது. இது சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களை எங்களுக்கு எழுதுங்கள். உங்களுடைய ஆக்கங்கயை எதிர் பார்க்கின்றோம் இம் முறை சிறப்பாக எமது கடவுளர்களான சிவாவையும் விஸ்ணுவையும் பற்றி ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை வருகின்றது. படித்து மகிழுங்கள்.

கலசம் மாமா

# siva and vishnu are one

A saivite is a devotee of lord siva.. a vaishnavite is a devotee of lord vishnu. upasana means worship or sitting near god. upasaka is one who dose upasana. upasana or aradhana leads to realisation of god. Saivite never enters a Vishnu temple. he never drinks water from a Vaishnavite. he never takes food with a vaishnavite. He never repeats the name of hari. He speaks ill of lord hari. He thinks that lord siva is superior to lord vishnu. He never reads vishnu puruna. Is this not the height of folly? Is this not extreme ignorance?He has not understood the true nature of lord Siva. He has no ideas of true religion. He is fanatic. He is a man of little understanding. A narrow sectarian, with a very small constricted heart. He likes a forg in the well which has no idea of the vast ocean.

A bigoted vira vaishnavite entertains hatred towards lor Siva. Saivites and Siva puranas which treat of lord Siva he never enters a siva temple. He never makes friendship with a saivite.He never drinks water from the hands of a saivite. He also behaves exactly deplorable.

There is a temple in sankaranay;anar koil in the thirunelveli distric(tamil nadu) where the idol has one half of it depicted as siva and the other half as vishnu. the inner significance of this that lord siva and lord vishnu are one. sri sankaracharya also has said in very clear terms that siva and vishnu are the one all pervading soul.

on one occasion a virasaivite entered the temple in sankaranayanar koil to worship lord.he offered incense. he pluggesd the nostrils of vishnu with the cotton as the fumes were entering his nose also after that a vira vaishnavite entered the temple and he also offeredincense. he plugged the nostrils of siva as the fumes were entering his nose also; such is the bigotry and narrow-mindedness of sectarians. a devotee should have a large broad heart he must see his tutelary deity in all aspects of the lord and in all forms. he can have intense love for his ishtam in the beginning, to intensify his devotion for that particular deity(prema-nishtha)but he should have equal devotion to the other forms of the lord also.


Siva And Vishnu are one and same entity. They are essentialy one and the same. They are the names given to the

different aspects of the all pervanding supreme soul or the absolte. sivasya hiridayam vishnur-vishnoscha hridayam sivah—-vishnu is the heart of siva and likewise siva is the heart of vishnu.

The sectarian worship is of recen origine. the saiva siddhanta of kantacharya is only five hundred years old. the vaishnava cults of madhva and sri ramanuja are only six hunred and seven hundred years old respectively. there was no sectarian worship before seven hundred years.
Brahma represents the creative aspect. Vishnu the preservative aspect and Siva the destructive aspects of paramatman. this is judge you put on one kind of dress.at home you wear another kind of dress. when you do worship in the temple you wear another kind of dress. you exhibit different kinds of temperament on different occasions.even so the lord dose the function of creation when he associated with rajas. and he is called brahma. he preserves the world when he is associated with satva guna and he is called vishnu. he destroys the world when he is associated with tamo-guna and he is called Siva or Rudra Brahma Vishnu and Siva have been correlated to the there avasthas or states of consciousness during the waking state sattava predominates. during the dreams state rajas predominates and during the deep sleep state tamas predominates hence vishnu; brahma and siva are the murtis of jagrat,svapna and sushupti states of consciousness respectively. the turiya or the fourth state is parabrahman. the sushupti state is immediately next to the deep sleep state. worship of siva will lead quickly the attainment of the fourth state Vishnu puruna glorifies vishnu and in some plaees gives a lower position to siva. siva puruna glorifies siva and gives a lower status to vishnu. devi bhagavata glorifies devi and gives a lower status to brahma, vishnu and siva this is only to instil and intensify devotion for the respective deity in the hearts of the devotees. in reality, no deity is superior to


another.
you must understand the heart of the writer.
May you all realise the oneness of siva and vishnu! may you all be endowed with pure subtle intellect and proper understanding!

Manikavasaka swamigal



# RAMAYANA


## CHILDHOOD EPISODE -1



Festivities continued for days together on end. Bazars and streets were profusely decorated with bunting and colourful gates. Rows of lit lamps were kept on the balconies at night. Ladies of the town were specially happy. They marched to the palace in groups singing joyful songs to congratulate the queens.

King Dashrath despatched a special messenger to convey the happy news to Sage Vasishtha. The Sage came to the palace to bless the new-born princes. A large number of *sadhus* and Brahmans were with him too.

The king paid his respects to all the saints and gave them gold, clothes and cows in alms. Saint Shringi was specially honoured in a befitting manner. He blessed the entire royal family and the four princes in particular.




Merriment and celebrations went on for over a month. When the princes were forty days old, their christening ceremony was held. The king requested Sage Vasishtha to suggest befitting names for the four princes.

The royal priest (Vasishtha) performed the naming ceremony and named Kaushalya's son **Rama,** *the source of bliss.* As for Kaikeyee's son, he was named **Bharata**—*caretaker of one and all.*

"Queen Sumitra's eldest son is born *to destroy the enemies* ; so he should be named **Shatrughna.** Her younger son is to *possess the best of the human qualities.* So, he is to be named **Laxmana,**" said Sage Vasishtha.


The queens liked the names very much. They were indeed extremely delighted



Rama, the eldest prince, had a sallow complexion. But he was extremely handsome. The gold chain around his waist and the amulets on his arms added to his personal charms all the more. He was the apple of the king's eye. All the three queens loved him most dearly too.

Rama's movements and pranks were very fascinating indeed. He was the talk of the entire palace. Whoever saw him, he/she wanted to take him into his/her arms and fondle him lovingly.


All the other three princes were fair-complexioned. The king and the queens were almost always lost in their dear sons. They fed them with their own hands and could ill-afford to let them be away from their eyes even for a moment.



In due course, the princes grew young. The king requested the royal priest to perform their thread ceremony. This done, their formal education started. First of all,they were imparted training in shooting arrows.

Rama was the most handsome and lovable of all the princes. He was cool-tempered and patient by nature. Lakshmana was more attached to Rama from the very beginning though he was quick to anger. As for Bharata and Shatrughna, they were very intimate.

As the princes grew up further, the king decided to send them to the *ashram* (hermitage) of Sage Vasishtha for all-round education befitting the then princes.




There they were to live as continents *(brahmacharis)* till the age of 25 years and attain knowledge at the feet of the great *guru.*

The princes were soon informed that they were to go to the hermitage of the royal priest. So, they prepared themselves for that. Soon, they got their hair shorn and dressed up as continents in coarse clothes of saffron colour.

Then the princes, led by Rama, went to their mothers to seek their permission to leave the palace. The mothers felt shocked at the very idea of separation from their sons. But the family tradition was to be followed.

So, they had to send them off but with heavy hearts and tears in their eyes.



At Sage Vasishtha's hermitage, the princes started learning various disciplines at the feet of the great teacher. The Sage imparted them knowledge befitting the princes of a great kingdom.

The princes devoted themselves to studies and served the sage as humbly as they could. He imparted them the knowledge of the three aspects of God's power—*Creation*, *Preservation* and *Destruction*.

Also, he told them that the life-span of a man has four parts :

| | |
|---|---|
| 1. From birth to the age of 25 years | *Brahmacharya* (continence) |
| 2. From the age of 25 years to the age of 50 years | *Girhasth* (house-holder) |
| 3. From the age of 50 years to the age of 75 years | *Vanaprastha* (detachment) |
| 4. From the age of 75 years to death | *Sanyas* (renunciation) |

தொடர்ச்சி அடுத்த இதழில்...

KUMARANS

# குமரன்ஸ்

***Imports & Exports***

Imports & Exports

உங்களுக்கு அன்றாடம் தேவையான லீலா தயாரிப்பு பொருட்களை மொத்த விற்பனை விலைக்கு தொகையாக வாங்கி சிக்கனமடையுங்கள்

FREE PARKING AVAILABLE FOR OUR CUSTOMERS

**KUMARANS LIMITED**
142-144 HOESTREET
WALTHAMSTOW, LONDON E17 4QR
TEL
020 8530 3033
020 8521 4955
020 8521 4411

FAX
020 8530 5655
020 8521 9482

KUMARANS

லீலா தயாரிப்புகளின் அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள்

# இந்துக்களின் ஆன்மீகச்செல்வங்கள்

திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கம்

பூமியிலே ஆன்மீகச் செல்வங்கள் நிறைந்த நாடு இந்தியா. இது வடக்கே இமாலயம் முதலாகத் தெற்கே சிவபூமி எனத் திருமூலரால் மகிழ்ந்துரைக்கப்பட்ட ஈழம் வரையுள்ள நிலப்பரப்பை ஆதியில் கொண்டிருந்தது. வேறெந்த நாட்டிலும் தோன்றாத அளவில் பரந்த சமய தத்துவக்கோட்பாடுகளையுடைய சிவாகமங்கள் வட மொழி வேதங்கள் பிரமாணங்கள் ஆரணியகங்கள் உபநிடதங்கள் மீமாம்சங்கள் யோகசூத்திரநூல்கள் தேன்றிய நடு இந்தியாவே, இவ்விதமே தமிழிலும் ஆகமங்கள் திருக்குறள் திருமந்திரம் சைவசித்தாந்தசாத்திரங்கள் தேவார திருவாசகங்கள் ஆழ்வார் பாசுரங்கள் என்பன ஏராளமாக அருளப்பட்ட நாடும் இந்தியாவேதான். இனி மக்கள் இல்லறம் அரசியல் பொருள்வளங்கள் பற்றி அறிவுறுத்த இராமாயணம் மகாபாரதம் அர்த்தசாஸ்திரம் மனுதர்மசாஸ்திரம் என்பன வடமொழியிலும் பத்துப்பாட்டு பதினெண் கீழ்க்கணக்கு முதலானநூல்கள் தமிழிலும் இந்தியாவிலேதான் தோன்றின. வேறந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு இந்தியாவிலே தான் ஆன்மீகசிந்தனையாளர்கள் பனிமலைச்சாரல்களிலும் குகைகளிலும் காடுகளிலும் மலைகளிலும் ஆற்றோரங்களிலும் நித்தம் யோகத்திலும் தவத்திலும் இருந்துலருகின்றார்கள். இந்த யோகமும் தவமும் மொஹெஞ்சதாரோவில் கிடைக்கப்பெற்ற யோகியின் உருவச்சித்திரத்தில் இருந்து கி மு 2500ம் ஆண்டளவிலே இந்துக்களுக்கு கைகூடியிருந்தது எனின் மிகையாகாது. இத்தகைய ஆன்மீகச்செல்வங்களை நாம் வேறெந்த நாட்டிலும் கண்டதுமில்லைக் கேட்டதுமில்லை.

## இந்துக்களின் மதங்கள்

இத்தகைய புனிதமுடைய இந்தியாவிலே தோன்றிய மதங்களே சைவம் வைணவம் ஆகிய பெருமதங்கள் உலகைப்படைத்துக் காத்து அழிக்கும் சக்திகளாகவே பிரம்மா விஷ்ணு ருத்திரன் ஆகிய திருக்கோலங்களை இந்துக்கள் கருதுகின்றார்கள். இதுவே சைவத்தினதோ வைணவத்தினதோ அடிப்படையாகும் ஆயினும் மாறுபட்ட குணங்களால் மருள்கின்ற மனுக்குலத்தினரை தார்மீக வழியில் நெறிப்படுத்த சிவன் தன் சக்திமூலம் அம்மன் காளி விநாயகர் பைரவர் முருகன் முதலான தோற்றங்களை எடுத்து அவ்வப்போது மக்களைக் காத்தருளியுள்ளார். இவ்விதமே விஷ்ணுசக்தி தன் காத்தல் தொழிலை நியதியிலிருந்து வழுவாமல் இருக்க நாராயணர் நரசிங்கர் இராமர் கிருஷ்ணர் முதலான பல அவதாரங்களை எடுத்து மக்களுக்கு தெய்வீக மகிமைகளைக்காட்டி காத்தல் தொழிலைப் புரிந்திருக்கின்றார். இவ்வாறு மனுக்குலத்தைக் காக்கவும் ஆன்மீகவழியில் செலுத்தவும் இறைவன் எடுத்த பல்வேறு கோலங்களைக் கண்டனுபவித்தவர்கள் இந்துக்கள். இவர்களுள் மாணிக்கவாசகர் தாம் கண்டனுபவித்ததை

**யாவரும் பெறவுரும் ஈசன் காண்க**
**கண்ணால் யானுங்கண்டேன் காண்க**
**புவனியிறிசேவடி தீண்டினன்காண்க**
**சிவனென யானும் தேறினன் காண்க**
**அவளும் தானும் உடனே காண்க**

***(திருவண்டப்பகுதி)***

**வேறுவேறு உருவும் வேறுவேறு இயற்கையும்**
**நூறுநூறாயிரம் இயல்பினதாகி**
**ஏறுடை ஈசன் இப்புவனியை உய்யக்**
**கூறுடை மங்கையுந்தானும் வந்தருளி**
***(கீர்த்தித்திருவகவல்)***

என்று கூறுவதால் இறைவன் ஏற்கும் கோலங்கள் வடிவங்கள் பலவாம் என்பது புலனாகின்றது. இவ்வாறு இறைக்கோலங்களை ஊனக்கண்களால் கண்டனுபவித்தோர் ஒருபுறமிருக்க மறுபுறத்தில் யோகியர் ஞானியர் தமக்குள்ளேயே இறைவனைக்

கண்டின்புற்றுள்ளனர். – திருமூலர்

**உடம்பினுக்குள்ளே யுறு பெருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான்**

என்பதனால் இவர்களுக்குக் கோவில்களோ திருமூர்த்தங்களோ நித்திய விசேட பூசைகளோ வேண்டியதில்லை. இவையெல்லாம் இவர்களுக்கு அர்த்தமற்றவையே. பதினெண் சித்தர்களுள் ஒருவரான யோகநாதரால் கிரியாயோகம் பயிற்சி அளிக்கப்பட்ட நாகராஜர் பாபாஜி 1800 வருடங்களாக இமாலயத்தின் பத்திரிநாத்சாரலில் சொரூபசமாதி மூலம் மரணத்தை வென்று மானிட வடிவில் எமக்கும் காட்சி அளிக்கும் நிலையில் இருக்கின்றார். இத்தமிழ் யோகி காட்சி கொடுத்து! கிரியா யோகத்தைப் பயிற்றுவித்த சீடரே செட்டி நாட்டைச் சேர்ந்த யோகி ராமையா ஆவர். இன்னும் கலியுகத்தின்அழிவுநிலையிலிருந்து மக்களை மீட்கவே விஷ்ணுவின் அவதார வரிசையில் தோன்றியவரே பகவான் சத்தியசாயிபாபா ஆவர் தெய்வீகமகிமைகளால் மக்களிடம் இறை நம்பிக் கையை வலுப்படுத்தியதோடு இவர் தன் அடுத்து இடம் பெறவிருக்கின்ற பிரேம சாயி அவதாரத்தில் (இது இன்னும்29 வருடங்களால் இடம்பெறவுள்ளது என்று தீர்க்கதரிசனமும் கூறியுள்ளார். (விவிலியவேதமும் இத்தகைய சுவர்க்கபூமி விரவில் வரலாம் என்ற தீர்க்கதரிசனத்தை வற்புறுத்தியுள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கது ) இவ்வாறு ஆன்மீகச்செல்வங்கள் நிறைந்த நாடு இந்தியா எனில் மிகையாகாது.

## இந்துக்கள் சமரச உள்ளம் கொண்டவர்கள்

ஆன்மிக ஊற்றுக்கள் பெருகி வழியும் நாட்டினைக் கொண்ட இந்துக்கள் தமது ஆன்மிகநெறியில் இன்பம் கண்டமையால் பிறமதங்களையும் இயல்பாகவே நேசிக்கும் அன்புள்ளம் கொண்டவர்களாய் இருந்தார்கள். இப்பூமியில் காணப்படுகின்ற மொழி இன சமய கால இட தேச வேறுபாடுகளுக்குப் பின்னாடியிலுள்ளவன் இறைவனே. எல்லாம் அவன் செயலே என்ற உண்மையைப் புரிந்து கொண்டவர்களாதலால் எந்த மதத்தினையும் பொய்யானவை என எடைபோட்டார்களில்லை. அதனாலே தான் முதலில் பௌத்தம் ஜைனம் முதலான மதங்களை மக்கள் தழுவியபொழுதும் பின் இஸ்லாம் கிறிஸ்தவம் போன்ற மதங்களைத் தழுவிய பொழுதும் இந்துக்கள் அச்சமடையவில்லை. இறைவனை வழிபடுவதற்கு ஒருவனுடைய உள்ளம் எது சரி–யென்று உணர்கின்றதோ அந்தவழியிலே வழிபடுதலே சிறந்தது என்று கண்டனர். இத்தகைய கண்ணோட்டத்தால் இந்துமதம் எள்ளளவும் பாதிக்கப்படவில்லை மாறாக அதன் மகிமையை முன்னரிலும் பார்க்கச் சுடர்விட்டெரியச் செய்யவல்ல அவதார புருஷர்களும் யோகியரும் ஞானியரும் தோன்றிக் கொண்டேயிருந்தார்கள். அதனாலே மேலை நாட்டார் ஆன்மீக நாட்டம் ஏற்பட்டதும் இந்தியா ஈழம் என நாடிச் சென்று கொண்டிருக்கிறார்கள். பகவான் சாயிபாபா தன்னிடம் வருகின்ற கிறிஸ்தவபக்தர்கள் இஸ்லாம–யபக்தர் சீக்கியபக்தர் பௌத்த பக்தர் முதலானோரைத் தத்தம் மதங்களிலிருந்து கொண்டே இறைவனைத் தம்முள் கண்டின்புறும் தியான யோகப்பயிற்சிகளை இவர்களுக்கு அளித்து வருகின்றாகள். மதங்களெல்லாம் இறைவனைத் தேடி அலைகின்றன என்பதனை பகவான் சாயி உணர்ந்தமையினாலே அவரவர் மதங்களின் பெருமையை அவர்களுக்குச் சொல்லிவைத்தார், இதுகாலவரை வேறு எந்தமதத்தினரும் இவ்வாறு வழி நடத்தியதில்லை, மாறாகத் தத்தம் மதங்களே உண்மையான சமயம் பிறயாவும் பொய்ச்சமயங்கள் என்று பிரசாரம் செய்து பாமரமக்களின் உள்ளங்களை வெறுமை யாக்கிவிடுகின்றனர். அதனோடு இந்துக்கள் பல்லாயிரமாண்டுகளாக அனுபவித்து வந்த இறையின்பத்தை ஒருவினாடியில் தகர்த்தெறிந்து இந்துக்களின் ஆன்மீகச்செல்வங்களையும் குப்பைத்தொட்டிகளாக எடைபோட்டுக் காட்டி விடுவார்கள். இவ்வாறு இவர்கள் இந்துமதங்களில் ஆராய்ந்து கண்டுபிடித்த கண்டுபிடிப்புக்கள் என்ன என்று ஈண்டு சுருக்கமாக ஆராய்தலும் அவசியமா கின்றது.

## பல தெய்வங்கள்

இந்துமதம் பலதெய்வங்களைக்கொண்ட வழிபா டுடையது. அதனால் சாத்தானால் வழிநடத்தப்படு கின்றார்கள் இந்துக்கள் என்பது பிரதானமான குற்றச்சாட்டு. இந்துமதத்தின் உண்மை என்னவெ–னில் ஒன்றுதான் பரம்பொருள் அதனை அன்பர்கள்

பல பெயர்களால் அழைத்து பல அருட்கோலங் களில் கண்டின்புறுகின்றனர் என்பதேயாம். சிறப்பாகச் சைவம் எல்லா உயிர்களையும் தழுவி நின்று அவற்றையெல்லாம் உய்ய வைக்கும் அன்பு மதமாகும். அன்பே சிவம் என்பதே சைவமாகும். இவ்வாறாக இறையின் உண்மைத்தத்துவத்தை விளங்கிக் கொண்டவர்கள் இந்துக்கள். அதனால் இறைவன் அறத்தை நெறிப்படுத்த எடுத்த அருட்கோலங்களான சிவன் அம்மன் பிள்ளையார் முருகன் விஷ்ணு முதலானவை பரம்பொருளின் தெய்வீக ஆற்றலின் வெளிப்பாடுகளே.இதெல்லாம் பரம்பொருளின் சக்தயின்பே தங்களேயாம். சிவசக்தி என்ற தத்துவத்தின டிப்படையிலே சீவராசிகள் அனைத்தும் உலகை இயங்கவைக்கின்றன. ஆகையினால் உயிர்களுக்கு அருள பாலிப்பதற்காக சிவசக்தியாகிய இயக்கநிலை இன்னும் பலவடிவங்களையும் தாங்கியுள்ளது.

அவற்றின் நோக்கம் பின்வருமாறு

**சிவன் உமைகலந்த வடிவம் -----ஆண் பெண் எனும் பேதமுடைய உயிர்களின் போகத்தை உணர்த்தும்**
**(அர்த்தநாரீஸ்வரர்)**

**சிவன் திருமால் கலந்தவடிவம் ----- ஆண்சக்தி யொன்றின்மூமமே நிறைவேற்றும் கருமங்க ளைக்குறிக்கும்**
**(கேசவார்த்தமூர்த்தம்)**

**வீரபத்திரர் - பத்திரகாளி ------- நெறிதவறும் மக்கள்இறைவனுக்கு அஞ்சி நீதிவழிநிற்க உணர்த்தும் வடிவம்**

**பைரவர் --துர்க்கை -------** கொடியோரைத் தண்டிப்பதற்காக எடுக்கும் போர்க்கோலம்

இவையெல்லாம் பரம்பொருளின் காரியபேதங்களேயன்றி வேறொன்றுமில்லை. இவ்வாறான இறைசக்தியின் அருட்கோலங்களைத் தம்மனதைக் கட்டுப்படுத்து வதற்கு மட்டுமல்லாமல் வாழ்வியலை நீதியின் வழியில் செலுத்துவதற்குமே துணைக் கொள்பவர்கள் இந்துக்கள். இந்நெறியில்ன் பலாபலன்களைக் கண்டதனாலே இன்னும் இறுக்கமாகத்தம் வழிபாட்டு நெறிகளை வலுவூட்டிக்கொள்கின்றார்கள்.

## மிருக வழிபாடு

இனி பல பயங்கரத்தோற்றமுடைய தெய்வங்களுடன் மிருகங்களும் வாகன வடிவில் சேர்க்கப்பட்டுள்ளன என்ற குறைபாடும் பரவலாகக் கண்டிக்கப்படுகின்றது.

விண்ணோர் புழுப்புல்வரமிபின்றி யாவர்க்கும் அரும்பொருள் (திருச்சதகம் ) என மணிவாசகரும் மிருகத்தை பார்க்கிலும் மனுசன் மேன்மையானவன் அல்ல எல்லாம் மாயையே (பிரசங்கி 3-19) என விவிலிய வேதமும் எல்லா சீவராசிகளிலும் இறைவன் உறைவதனைச் சுட்டிக் காட்டியுள்ளன இதனடிப்படையிலே சிவனைப் பசுபதி அதாவது உயிர்களுக்கெல்லாம் கடவுள் என்கின்றோம் பகுத்தறிவுடைய மனிதன் தன் ஆட்சிக்குட்பட் சீவராசிகள் அனைத்தையும் அன்புடனும் காருண்யத்துடனும் கண்காணிக்க வேண்டிய கடமைப்பாடுடையவன். இந்த உண்மையின் அடிப்படையிலே மனிதவடிவில் அருட்கோலம் கொண்ட தெய்வவடிவங்களுடன் மிருகங்களும் பறவைகளும் தொடர்புடையனவாகக் காட்டப்படுகின்றன. அதனோடு இந்துக்கோவில்களில் சாத்வீக உணவுகளை மக்களுக்கு பிரசாதமாக வழங்குவதும் மிருகக்கொலைகளற்ற வாழ்க்கை முறைகளை மனிதன் பேணவேண்டும் என்பதற்கேயாம். அதனாலே விடமுடைய பாம்பைக் காணுமிடத்து அது சிவன் கழுத்தில் அணியாக இருப்பது என்று எண்ணி அதனை அதன் வழியே போகவிட்டுவிடுவார்கள். மிருகங்களிலும் இறைவன் அன்புடையவனாக இருக்கின்றான். மிருக வாகனங்னள் கொண்டு உணர்வோமாக.

## விக்கிரக வழிபாடுகள்

இந்துக்கள் விக்கிரக வழிபாட்டினர் மட்டுமன்றிப் பஞ்சபூதங்களும் கூட இறைவனின் ஆதாரசுருதிகளே என்று வணங்கும் இயல்புடையவர்கள். சிதம்பரத்தில் ஆகாயவெளியும் திருவண்ணாமலையில் ஒளியும் திருவானைக்காவில் நீரும் வைத்தீஸ்வரன் கோவிலில் மண்ணும் மூலஸ்தானத்தில் நிலைகொண்டுள்ளதை நாம் அறிவோம்.

## சாதியமைப்புக்கள்

இனி இந்து சமயத்தில் சாதியமைப்புக்கள் பாமரமக்களின் வழிபாட்டுணர்வுகளைப் புண்படுத் துகின்றன. அதனால் இறைவன் விரும்பும் அன்பினூடான சகோதரத்துவம் அற்றுப்போன மதம்

தான் இந்துமதம் என்று எடைபோடுகின்றார்கள். இவ்வளவு ஆன்மீகச் செல்வங்களைக் கொண்ட இந்தியாவில் சாதிப் பிரிவினைகள் இருப்பது உண்மைதான். ஆனால் இறைவழிபாடும் அன்பும் பக்தியும் கட்டுப்பாடு மீறியதொன்று. தமிழ்நாட்டில் பல்வேறு குலத்திலிருந்தும் வந்தவர்களாகிய 63 நாயன்மார் வரலாறுகள் அவர்கள் வழிபாட்டுக்கும் ஆன்மஈடேற்றத்திற்கும் சாதி ஒரு தடைக்கல்லாக அமைந்திருக்கவில்லை என்பதனை எடுத்துக் காட்டியிருக்கின்றன. மனிதநேயமற்ற ஒருசில வகுப்பினரின் குறுகியகண்ணோட்டத்தினை வைத்து இந்துமதத்தை எடைபோடுவது தவறு. இறைவன் என்ற பரம்பொருள் சீவராசிகளிடத்தில் தமக்குள்ள நேயம் என்ன என்பதனை எவ்விதம் வலியுறுத்தியுள்ளார் என்பதனைக்கொண்டே நாம் எடைபோட வேண்டும் இந்த சீவராசிகளிலெல்லாம் உறைகின்ற இறைவன் பட்சதாபமற்றவர். எங்கெல்லாம் சீவராசிகள் உறைகின்றனவோ அங்கெல்லாம் இறைவன் காட்சி கொடுக்கின்றான். திருஈங்கோய் மலையில் ஓர் ஈயும் திருவானைக்காவில் ஒரு சிலந்தியும் யானையும் சிவ வழிபாடு செய்து உயர்ந்தன என இத்தலவரலாறுகள் கூறுவதன் உண்மை என்ன? அப்படியானால் மனிதன் இறைவனை வழிபட சமுதாயத்தில் புரையோடிப்போன சாதியமைப்புக்கள் ஒரு தடையா–கலாமா? இல்லவே இல்லை. இன்னும் குறிப்பிட்டுச் சொல்லப்போனால் கிறித்தவர்களிடையும் இஸ்லாமியரிடையேயும் எத்தனையோ ஏற்றத்தாழ்வுகள் புரையோடிக் கிடக்கின்றன. வங்கதேசத்து இஸ்லாமியர்கள் எப்படி நடத்தப்பட்டார்கள்? தென்னாபிரிக்க கறுத்த இனகி–றித்தவர்கள் எவ்வாறு நடாத்தப்பட்டார்கள்? இதுபோன்ற சம்பவங்கள் மனிதனின் அறியாமையினால் ஏற்படுவனவாம். இது பொதுவாக மனிதனின் பலவீனமேயொழிய சமயத்தின் பலவீனமல்ல.

விவிலிய வேதத்தைப்போல் குர்ஆனைப்போல் திரிபிடகத்தைப்போல் இந்துக்களுக்கு பொதுச்சமய நூலொன்றில்லை என்பாரும் உள்ளனர் வேத சிவா–கமங்களிலிருந்து விரிந்த நூல்களே மற்றெல்லாம் என்பதனால் வேத சிவாகமங்கள் என்ற பொது நூலே இந்துசமய நூல்களென நாம்கொள்ள வேண்டும் ஆனாலும் காலந்தோறும் அவதாரபுருஷர்களாலும் சிவானுபூதிமான்களாலும் அருளப்பட்ட பகவத்கீதை திருமந்திரம் தேவார திருவாசகங்கள் யாவும் வேதசிவாகமங்களின் வழிவந்த நூல்களே. இவற்றுள் எவையும் முரண்படுவனவல்ல எனவே ஒரு சாதகனின் பக்குவதிற்கேற்ப இந்நூல்கள் எளிமையாகக் கடவுள் தத்துவத்தை விளக்குகின்றன. நூல் எதுவென்று தெரிந்து கொள்ள அவன் அவன்தான் அறிந்துகொள்ள வேண்டும். வேதசிவாகமங்களின் அறிவை எல்லோரும் பெறவேண்டிய அவசியமில்லை. நூலறிவைக் காட்டிலும் உள்ள உணர்வுகளும் ஆன்மீகப் பயிற்சிகளுமே தெய்வீக விடயத்தில் அவசியமானதொன்றாகும்.

இந்து சமயத்தில் இந்துக்களே காணும் குறை பாடுகள் சிவாகமக் கோவிற்பூசைக்குரிய மொழி வடமொழியா? தமிழா? என்ற சர்ச்சை குறித்து நாம் இறைவனிடமே தீர்ப்பு கேட்கவேண்டிய நிலையிலிருக்கின்றோம். ஏனெனில் இறைவனல்லவா ஒலியின் மூலகர்த்தா ஆதியில் ஓம் என்ற மூல ஒலியதிர்வுகளே பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கும் பிற சீவராசிகளின் ஒலிகளின் தோற்றங்களுக்கும் மூலமாகின. எனவே மனிதனின் மொழிக்கும் இறைவனே மூலகர்த்தா ஆவார். ஆகையினால் இறைவன் உயிர்கள் மீது மட்டுமன்றி மொழிகளிலும் பாரபட்சமற்றவர். ஒருவனிடம் பக்தியும் இதயசுத்தியும் இருப்பின் அவன் எவ்வாறும் எம் மொழியிலும் வளிபடலாம். விவிலிய வேதத்தின் முதல் ஏற்பாடு ஹீப்ரா மொழியிலும் புதிய ஏற்பாடு கிரேக்கமொழியிலும் தான் ஆதியில் எழுதப்பட்டிருந்தன. ஆனால் இன்று இம் மூலமொழிகளைத் தெரியாத மக்களின் 2167 மொழிகளில் விவிலிய வேதம் மொழிபெயர்க்கப்பட்டு இம்மொழிகளைப் பேசும் மக்களின் தேவாலயங்களில் வழிபாடு நடாத்தப்பட்டு வருகின்றன. இவர்களின் மொழிகாரணமாக கர்த்தர் வழிபாடுகளைக் கேட்பதில்லையா? இன்னும் தமிழகத்தில் இறைவ–னிடம் உறுதியான அன்பு கொண்டிருந்த மாணிக்கவாசகரதும் 63 நாயன்மார்களினதும் தமிழ் ஒலி கொண்டிசைத்த பாசுரங்களை அல்லது விமுந்தும் புரண்டும் அழுது புலம்பிய வார்த்தைகளைத் தமிழ் என்று இறைவன் செவ–சாய்க்கவில்லையா? மாறாக செவிசாய்த்தது மட்டுமல்ல காட்சியும் கொண்டருளினார் அல்லவா?

இவர்கள் எவரும் வடமொழி பேசியதில்லை.
இவ்விதமே தமிழர்களால் கட்டப்பெற்று தமிழர்களால் சிற்பங்கள் செதுக்கப்பட்டு பிரதிட்டை பண்ணப்பட்ட கோவிலிலும் பூசைக்குரிய மொழி எதுவானாலும் பக்தி முக்கியமே என்பது புலனாம். வெறும் மந்திர ஒலிகளை இறைவன் விரும்பினாரல்லர் என்பதனைப் பலவேதியர்க்கு இறைவனே உணர்த்தியுள்ளார்.
இனி இந்தியாவின் மிகப் பழையமொழிகளான தமிழ் வடமொழி இரண்டிலுமே இறைவன் தேவிக்குத் தத்துவங்களை உபதேசித்தான் என்பதனால் எல்லா மொழியும் இறைவனுக்கு சம்மதமே என்ற உண்மை பெறப்படுகின்றது. திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார் என்ற உரையின் அர்த்தமென்ன? பக்தி பரவசமாய் நெக்கு நெக்கு ருகுகையில் ஒருவன் தன்னை மறந்து இசைக்கையில் மொழியை வென்ற நிலை ஒன்று ஏற்படுகின்றது. அங்கே தான் இறைவன் உருகி உருகி காட்சிகொடுத்து ஆட்கொள்கின்றான்.
மற்று மகேந்திரமலையில் தோற்றுவிக்கப்பட்ட ஆகமங்கள் வலைஞனால் கடலில் மீட்டெடுத்த ஆகமங்கள் தமிழ் மொழியில்தான் தென்னாட்டவருக்கு அருளப்பட்டதென ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதனையே திருமூலர் திருமந்திரத்தில் குறிப்பிடுகின்றார் எனினும் இறைவன் தமிழில் சாஸ்திரங்கள் மிகாமை செய்தான் என்பதனாலும் தமிழிலிருந்த பழைய சமய இலக்கியங்கள் யாவும் முதற்சங்ககால இடைச்சங்ககால கடல் கோள்களினால் அழிந்து போனதாலும் தமிழர் சமய இலக்கியங்கள் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளவதற்கு வாய்ப்பில்லை. ஆயினும் பல்லவர்காலம் முதலாக தென்னாட்டு அரசுகள் வடமொழிச் செல்வாக்கினால் கோவிற் கிரிகைகளிலும் வடநாட்டு மொழிதெரிந்த பிராமணர்களை அமர்த்தியபொழுது அதுவரை காலமும் கோவிற் பூசகர்களாக இருந்த தமிழ்ப்பூசகர்கள் குகைகளைத் தஞ்சமடைய அவர்கள் ஆகமப் பூசைமுறைகள் வழக்கற்றுப் போயின. இக்காலம் முதலாகவே தமிழ் மக்கள் தமக்குப் புரியாத வடமொழிப் பூசைகளில் திருப்தியடைந்தனர். எதனையும் தாங்கும் உள்ளம் கொண்டவர்கள் தமிழர்கள் ஆனால் இன்றைய காலகட்டத்தில் வடமொழியில் பூசகர் சொல்வது விளங்கவில்லையே. என்று சிந்தித்து குரல் எழுப்பிவருவதும் நியாயமானதே மனிதனின் அடிப்படை உரிமை என்பது கோவில் வழிபாட்டில் இல்லையா?

இந்துக்களின் கோவில்களில் எந்த மொழியினராயினும் ஒருவன் தன் தாய்மொழியில் வாழ்த்தவும் வழிபடவும் உரிமையுடையவன் என்பதனை இந்துக்கள் சிந்தித்து செயலாற்றுவது அவசியம் அதற்காக வடமொழி பாரம்பரியங்களை முற்றாக ஒழித்துவிட வேண்டுமென்று எவருமே குரல் எழுப்பவில்லை என்பதும் சிந்திக்கப்படவேண்டிய விடயமே.

## அதிக கோவில்களை எழுப்புகிறார்கள்

ஈழநாட்டில் அதிககோவில்கள் அழிக்கப்பட்டு பாழடைந்து கிடக்கின்றன. மக்கள் புலன்களை அடக்கி ஒருநிமிடமேனும் இறைவனை நினைந்துருக கோவில்கள் இல்லாது காலத்தை அவமாக்குகின்றார்கள்.
மேலைத்தேய நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து வந்த ஒருசில சிவநேசச்செல்வர்களின் அயரா உழைப்பினால் லண்டன் பாரிஸ் போன்ற நகரங்களில் கோயில்கள் எழலாயின. ஏன் ? கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்ற சிந்தனை கொண்டவர்கள் தமிழ் மக்கள் இந்தச் சீரம் எமக்கு கிடைத்ததே இறைவனை வழிபட்டு இறப்புபிறப்பு இல்லா முத்தி நிலையடைவதன் பொருட்டே என்பது தான் இந்துக்களின் ஏகோபித்த எண்ணமாகும் அதனால் பாமர மக்களை இறைவன் வழி ஆற்றுக்படுத்தவும் தனிப்பட்ட மனிதர் வாழ்வையும் சமூகவாழ்வையும் நெறிப்படுத்தவும் கோவில் வழிபாடு மிக அவசியம் என்பதனை நாம் எல்லோரும் உணர்கின்றோம். அப்படியானால் பல கோவில்கள் எழுவதுபற்றி நாம் மகிழ்ச்சி அடைய வேண்டுமேயொழிய கவலையடைவது சமூக விரோதமேயாம். குறிப்பாக லண்டன் மாநகரில் உள்ள தமிழர் எல்லோருக்கும் அவர்கள் வதியும் இடங்களுக்கு அணித்தாக கோவில்கள் இருப்பது மிக அவசியமாகும்
வயோதிபர்களுக்கும் குழந்தைகளுக்கும் மட்டுமல்ல இயந்திர வாழ்க்கை நடாத்துகின்ற இளைஞர்களுக்கும் இல்லறத்தோருக்கும் கூட அவர்கள் வதியுமிடத்தில் ஒரு கோவிலாவது இருப்பது வரப்பிரசாதமேயாம் இது அந்நிய

நாட்டிலுள்ள பிரயாணக் கஷ்டங்களை நேரகால சுகாத்தியங்கள் முதலான தடைகளால் தமிழ்மக்கள் வீடுகளுக்குள் வருடம் முழுவதும் முடங்கிக்கிடக்காமல் ஆண்டவனைத்தரிசிக்க என்ற நோக்குடனாவது கோவில்களுக்குச்சென்று பூசைகளில் மனம் ஒன்றித்தம் துயரங்களை மறக்க கோவில்களே ஆதாரமானவை ஆகையினால் இந்துக்களின் ஆன்மீகச்செல்வமான கோவில்கள் எத்தனை எழுந்தாலும் நாம் ஆண்டவனின் செயல-ால்தான் அது இடம்பெறுகின்றது என்பதனை உணர்வோமாக

## கோவில்களில் வீண்செலவுகள்

கோவில்களிலுள்ள திருமூர்த்தங்களிற்கு பாலைச் சொரிகிறார்கள் தேனை நெய்யை ஊற்றுகிறார்கள் இதெல்லாம் வீணான செயல்கள் எத்தனையோ ஏழைகள் பட்டினி கிடக்கிறார்கள் அவர்களுக்கு இவற்றைப்பயன் படுத்தலாம் அல்லவா? என்று சிலர் குரல் எழுப்புகின்றார்கள். உண்மை என்னவெனில் வாழ்வில் ஒருநாளுமே ஏழைகளுக்கு இரங்கிப்பிச்சை போடாதவர்களும் அல்லது தான தர்மம் செய்யாதவர்களுமே இப்படியான கருத்துக்களை முன்வைக்கின்றார்கள். உயிர்களுக்குச் செய்கின்ற தொண்டு ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டென பகவான் சாயிபாபா அடிக்கடி நினைவூட்டினாலும் சனாதன தர்மநெறியில் செய்யவேண்டிய கோவிற்பூசைகளின் அவசியத்தையும் வலியுறுத்தத்த வறவில்லை அவரது பிரசாந்தி நிலையத்தில் உயிர்களதும் உலகத்தினதும் நன்மைகருதி பலவித தியாகங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன ஏனெனில் சனாதன தர்மத்தினாலும் மனிதன் உள்ளம் பண்பட்டால்தான் பிற உயிர்கள் மீது அவனுக்கு அன்பானது இயல்பாகும் உண்மையில் இப்பிரபஞ்சம் அனைத்தும் இறைவனுக்கே உரியது. அப்படியிருக்க காருண்யத்தால் எமக்கு இறைவன-ால் அளிக்கப்பட்ட பாலிலும் பழத்திலும் பிறவற்றிலும் பங்கு கேட்கவேண்டிய அவசியமுண்டா? எமக்கு படி அளந்தமைக்காக நாமே நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கின்றோம் அதற்காகவே ஆண்டவனாக பாவனை பண்ணப்படுகின்ற உருவத் திருமேனிகளுக்கும் மனிதருடைய உணர்வுகளை வெளப்படுத்தவல்ல பால் தயிர் தேன் நெய் முதலான அபிஷேகங்கள் செய்யப்படுகின்றன ஆண்டவனுக்கு எதனையும் அர்ப்பணம் செய்யக்கூடிய இதயமுடையவனே ஏழைகளுக்கும் அன்னதானம் செய்ய தன் கையை உயர்த்துவான். எனவே நன்றி யுணர்வுடன் இறைவனுக்குச் செய்யும் பூசை ஆராதனைகளைப் பொறாமைக் கண் கொண்டு பார்ப்பவன் பகுத்தறிவற்றவனேயாவான் நன்றியுடன் குறைவின்றிப் பூசைகள் நடாத்தும் பொழுது நாடும் கோனும் மக்களும் செழிப்படைகின்றார்கள். அதனாலே திருமூலர் கோவிற்பூசை முட்டிடின் நாடு கேடடையும் என்றார் இன்னும் இறைவற்கு பால் பழம்தான் இல்லாவிடினும் பச்சிலைதானும் அர்ப்பணித்து பூசை செய் என்கின்றார் இதனை

யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே

என்று கூறி இயலாதோர் கொடைகளையும் எளிமையாக்கிவிடுகின்றார்

## கோவில்களில் பெண்கள் பஞ்சபுராணம் படிக்கலாமா?

ஆண் பெண் இறைவனின் இருபாதிகளும் ஒன்றுசேர்கையிலே படைப்பும் உலக இயக்கமும் சாத்தியமாகின்றது. அதனாலே இந்துமதம் பெண்ணை சக்தி எனப்போற்றி வழிபடுகின்றது. உலகில் பெண்ணின் தாய்மை சக்தியை ஈடு செய்யக்கூடிய சக்தி பிறிதில்லை ஆயினும் பெண் இம்மாபெரும் பணியைச் செய்கின்ற காலத்தில் உடலின் இயற்கைக் காரணிகயால் அழுக்கடைக-ின்றாள்: இக்காலத்தில் அவள் தூய்மை அற்றிருப்பதனாலே புனிதத்தலமான கோவிலுக்குள் புகவோ அல்லது பூசைகளில் பங்கு கொள்ளவோ முடியாமல் போகின்றது. ஆனால் தூய்மையான காலத்தில் பெண் தன் இனிய குரலிசையால் இறைவனை மகிழ்விக்கலாம் அல்லவா? அப்பொழுது இறைவி பெருமைப்படுத்தப்படுகிறாள். எனவே பெண்கள் தம் இசையால் இறைவன் இறைவியை மட்டுமன்றி உயிரினங்களையும் மகிழ்விப்பார்களாக

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

******

# உலகத் தமிழ் மக்களிடம் கொலண்ட் செல்வ விநாயகர் சபையின் அன்பான வேண்டுகோள்

உலகின் பல நாடுகளில் வாழும் தமிழ் மக்களிடமும் அங்குள்ள அறங்காவல் சபைகளிடமும் கொலன்ட் டென்கெல்டரில் கோவில் கொண்ட ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகப் பெருமானின் சார்பாக ஆலய நிர்வாக சபையினரும் அதனை சூழவுள்ள தமிழ் மக்களும் அவசரமாக விடுக்கும் வேண்டுகோள்.

கொலன்ட் டென் கொல்லடரில் 1991 ம் ஆண்டு இங்கு சிறு தொகையினராக வாழுகின்ற தமிழ் மக்களாகிய எங்களால் கிறிஸ்தவ தேவாலயத்திற்குச் சொந்தமான சிறிய அறையொன்றில் ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர் ஆலயம் ஆரம்பிக்கப்பட்டு இன்று மாநகர சபையின் வாடகைக்கட்டிடத்தில் ஒரு ஆலயம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு படிப்படியாக வளர்ந்துள்ளது. ஆலயத்தின் மூல மூர்த்தியாக விநாயகப்பெருமான் அமர்ந்திருக்க பரிவார மூர்த்திகளாக மஹாலட்சுமி கண்ணன் வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான் வைரவர் கோவில் கொண்டுள்ளனர். இவ்வாலயத்தில் இந்த நாட்டின் பல பாகங்களிலும் வாழும் சைவத்தமிழ் மக்களை ஒன்றினைக்கக்கூடிய வகைகளில் பூசைகள் ஒழுங்கு செய்யப்பட்டு ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடைபெற்று வருகின்றது. பங்குனி மாதத்தில் உத்தர நட்சத்திரம் கூடிய முதல் பத்து நாட்களும் மகோற்சவ காலமாக நடைபெற்று வருகின்றது. அத்தோடு எமது கலையும் கலாச்சாரப் பண்புகளும் பேணிப்பாதுகாக்கக் கூடிய முறையில் ஆண்டு தோறும் கலை கலாச்சார நிகழ்வுகளும் விழாக்களும் நடைபெற்று வருகின்றன. எமது இளம் தலைமுறையினருக்கு தமிழ் சமய கலை வகுப்புக்களும் ஆலய மண்டபத்திலே நடைபெற்று வருகின்றது.

தற்போது நாம் எதிர் நோக்கும் பிரச்சனை என்னவென்றால் எமது ஆலயம் அமைந்துள்ள கட்டிடமும் அதனைச் சுற்றியுள்ள கட்டிடங்களும் பழமையானது என்பதனால் மாநகர சபையின் புதிய நகர் நிர்மாணத் திட்டத்தின் கீழ் பழைமையான கட்டிடங்களை அழித்து அவ்விடங்களில் புதிய வீடுகள் கட்டி அதனை விற்றுவருகின்றார்கள். எதிர்வரும் காலத்தில் நாமும் இவ்விடத்தை விட்டு அகல வேண்டியுள்ளதால் நாம் எமக்கு பொருத்தமான இடத்தினை தெரிவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். கடந்த ஒன்பது ஆண்டுகளாக கொலன்ட் வாழ் தமிழ் மக்களாகிய எங்களால் சிறிது சிறிதாக கட்டிக்காத்து வளர்த்து வந்த அரும்பெரும் சொத்தை தொடர்ந்து அழியாது பாதுகாக்கும் நோக்குடன் ஆலயம் அமைப்பதற்கும் எமது கலை கலாச்சார நிகழ்வுகளை நடாத்துவதற்கும் சொந்தமான ஒரு காணியினை வாங்குவதற்காக அனுமதி வழங்கும்படி மாநகரசபைக்கு விண்ணப்பித்திருந்தோம். சாதகமான பதில் எமக்கு கிடைத்துள்ளது. ஆனால் எமக்குத் தரவிருக்கும் காணியில் கோவிலுக்கு தேவைப்படும் கட்டிடத்தினை கட்டிமுடிக்ககூடிய பொருளாதார உதவிகள் எங்களிற்கு உண்டு என்பதை எழுத்து மூலமாகவோ அல்லது வங்கியிருப்புக்கள் மூலமாகவோ நிரூபிக்க வேண்டியுள்ளது. குறிப்பிட்ட கால எல்லைக்குள் அக்காணியினை வாங்கும்படியும் வாங்கத்தவறின் அதை வேறு நிறுவனங்களுக்கு கொடுத்து விடுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். இக்காணியினை வாங்குவதற்கு எமக்கு 62322 ஸ்ரேலிங் பவுண்கள் தேவைப்படுகிறது. இதில் கோயிலின் வங்கிக்கணக்கில் 24411 ஸ்ரேலிங் பவுண்கள் இருப்பில் இருக்கிறது மிகுதி 37911 ஸ்ரேலிங் பவுண்கள் அவசரமாகத் தேவைப்படுகிறது. இந்த நாட்டில் மிகவும் சிறிதளவு தொகையில் வாழும் தமிழ் மக்களாகிய எம்மால் இப்பெரும் தொகையினை ஈடுகட்ட முடியாத நிலையில் இவ்வளவு காலமாக நாம் பல சிரமத்தின் மத்தியிலும் சிறிது சிறிதாக வளர்த்தெடுத்த எங்களின் ஒரே செல்வச் சொத்தினை அழிந்துவிடாது பாதுகாப்பதற்கு உங்களின் உதவியினை வேண்டி நிற்கின்றோம்.

மனமுவந்து காலத்தால் அழியாத இப்பணிக்கு உதவி செய்ய முன்வாருங்கள். நீங்கள் பெருமையுடன் பேசும் தமிழ் மொழியினையும் கலை கலாச்சாரப் பண்புகளையும் கொலன்டில் பேணி பாதுகாக்க உதவுங்கள். மதமாற்றம் என்ற போர்வையில் மனம் மாறி இந்த நாட்டில் அலையும் இளைஞர்களை நல்வழியில் நெறிப்படுத்த உதவிடுங்கள். நீங்கள் கொடுக்கும் சிறு தொகை மூலம் நாங்கள் வழிபடுவதற்கு ஒரு ஆலயமும் கலாச்சார விழாக்களை நடாத்துவதற்குரிய ஒரு

இடத்தையும் அமைத்துக் கொள்ளுவோம்.. நீங்கள் செய்ய விரும்பும் உதவி பற்றியும் அதன் தொகை பற்றியும் அதனை எத்தனை தவணை முறையில் செலுத்த விரும்புகின்றீர்கள் என்பன போன்ற விளக்கங்களை உங்கள் உத்தியோக பூர்வ தொடர்பால் காகிதத்தில் (letter head)எங்கள் ஆலய விலாசத்திற்கு தயவு செய்து மிகவிரைவில் அனுப்பி வைத்தால் அவற்றை நாம் மநகரசபைக்கு காண்பித்து அவர்களின் அனுமதியினைப் பெற்று காலத்தால் அழியாத இப்புனிதப் பணியினை நிறைவேற்றுவோம். எல்லாம் வல்ல இறையருள் எம்மை இப்புனித பணியில் வழி நடாத்திச் செல்லட்டும்.

கொலன்டில் சிவாகம முறைப்படி அமைய விருக்கும் ஆலயத்திற்கு நீங்கள் உதவக்கூடிய வழிகளில் சிலவற்றை கீழ்க் குறிப்பிடுகின்றோம்.

1)கொலன்ட் அரசாங்கம் விற்கும் காணியின் ஒரு பகுதியை வாங்கி ஆலயத்திற்கு வழங்குதல்.

2)ஆலயத்தின் கட்டிட அமைப்பிற்கு அத்திவாரம் போடும் செலவை பொறுப்பேற்றல்

3)ஆலயத்தின் மேற்கூரை போடும் செலவை பொறுப்பேற்றல்

4)ஆலயத்தின் கருவறை மற்றும் பரிவார மூர்த்திகட்குரிய சுற்றுப்பிரகாரக் கட்டிடங்களைப் பொறுப்பேற்றுக் கட்டுதல்

5)ஆலயத்திற்குத் தேவைப்படும் கருங்கல்லில் வடிக்கப்பட்ட விக்கிரகங்களை அன்பளிப்புச் செய்தல்

6)ஆலயத்திற்கு வர்ணம் செய்யும் வேலையைப் பொறுப்பேற்றல்.

7)ஆலயச்சுவர்களில் தூண்களில் சித்திர வேலைப்பாடுகள் செய்யும் பொறுப்பை ஏற்றல்.

8) இராஜ கோபுரம் தெற்கு வாசல் கோபுரம் கட்டும் செலவில் ஒரு பகுதியை பொறுப்பேற்றல்.


9)கும்பாபிஷேகச் செலவில் ஒருபகுதியைப் பொறுப்பேற்றல்.

10)மொத்த செலவின் ஒருபகுதி பணத்தை ஆலய கட்டிடக்கணக்கில் வங்கியில் வைப்புச்செய்யதல்.

ஆலய கட்டிடத்திற்கான வங்கிக் கணக்கு

VERENIGING SRI VATRATHA RAJA SELVA VINAGYAGAR
Bouwrekening no; 54,17.30 231
ABN-AMRO Bank
Den Helder nederland(Holland)

********************



# GNANAM
T E L E C O M




தொலைபேசி இணைப்புக்கள் மலிவு விலையில் வேண்டுமா?

**நிறைவான சேவை!**

**விரைவான சேவை!**

**தெளிவான சேவை!**

இவற்றுக்காக எங்கும் நீங்கள் போகவேண்டாம்.
உடனே அணுகுங்கள் ஞானம் தொலைபேசி நிறுவனத்தை.

**இத்தனைக்கும் நீங்கள் அணுகவேண்டிய முகவரி**

Gnanam
**telecom centers**

180 High Street North
East ham London
Tel: (+0044) 0181 47 08 84 4
Fax: (+0044) 0181 47 08 77 7

| | |
|---|---|
| Australia | 5p |
| Canada | 5p |
| France | 5p |
| Germany | 5p |
| India | 25p |
| Italy | 7p |
| Malaysia | 14p |
| Pakistan | 29p |
| Singapore | 15p |
| Sri lanka | 27p |
| U.K | 3p |
| U.K mobile | 11p |

# இலண்டன் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவில்
# சிவயோகம்
# திருமணமண்டபம்

**இரு வருடங்களில் 200 திருமணங்களைக் கண்ட ராசியான திருமண மண்டபம்.**

**500 இருக்கைகள்**

**அழகிய மணவறைகள்**

**அலங்கார ஜோடனைகள்**

**இசைக் கருவிகள்**

**உணவு வசதிகள்**

சகலதும் சிறந்த முறையில் அமைந்துள்ள இலண்டனில் உள்ள ஒரே ஒரு திருமண மண்டபம்

தொடர்புகட்கு:

நிர்வாகி

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்

சிவயோகம்

**தொலைபேசி: 0181 767 9881**

**தொலைநகல்: 0181 767 9881**

# ஸ்ரீ ரமண மகரிஷி

( சென்ற இதழ்த் தொடர்ச்சி)

இதில் ஆச்சரியம் என்னவென்றால் மகரிஷிகள் திருவொற்றியூருக்குச் சென்றதே இல்லை. ஆனால் மகரிஷிகள் சொன்ன அடையாளங்கள் யாவும் காவ்ய கண்டர் அச்சமயத்தில் வசித்துவந்த



எச்சம்மாள்

கோவிலுக்குப் பொருத்தமாகவே இருந்தன.

காவ்யகண்ட முனிவர் மகா மேதாவி. பண்டித சிரோன்மணி அருட்கவி பல பாசைகளிலும் பேச வல்லபர். ஆனால் மகரிஷிகளிடமுள்ள அபார பக்தியினால் தமது சிறப்பனைத்துக்கும் காரணம் தமது குருதேவரான மகரிஷியின் அருளே என்று அவர் கூறுவார். அற்புதமான யோக அநுபவங்கள் பல அவருக்கு நேர்ந்தன. 1922ஆம் ஆண்டில் மாமரக்குகையில் தவத்திலிருந்த கணபதி முனிவர் கபால பேதம் என்னும் அரிய யோகானுபவமுற்றார். அந்தோ உன்னத இலட்சியங்களைக் கொண்ட இப்பெரியார் சிறந்த தபஸ்வி சீர்ய அறிஞர் வெகு நாள் வாழ்ந்திருக்க இந்நாடு பாக்கியம் பெறவில்லை. 1936 ஆம் ஆண்டு ஜுலை மாதம் இருபத்திஐந்தாம் தேதியன்று கல்கத்தாவை அடுத்த கரக்பூருக்கு அருகில் நிம்புரா என்னும் இடத்தில் உள்ள ஆச்சிரமத்தில் இவர் பூதவுடலை நீத்துப் பொருணிறை அமரரானார்.

## இதர பக்தர்கள்

அக்காலத்துப் பக்தர்களுள் திருவண்ணாமலையில் பொதுப் பணித்துறை மேற்பார்வையாளராக இருந்த ஸ்ரீராமசாமிஐயர் என்பவரும் ஒருவர். பகவானது சன்னிதானத்துக்கு வந்த இரண்டாம் முறையே அவரது உள்ளத்தில் உணர்ச்சி பொங்கியது. சாஷ்டாங்கமாக வீழ்ந்து வேண்டுவராயினர். சுவாமி ஏசுநாதர் போன்ற மகான்கள் பாவிகளைக் கரையேற்றவே இவ்வுலகில் தோன்றினர். எளியேனுக்கும் கடைத்தேற வழியில்லையா? உய்வில்லையா? என்று அவர் ஆங்கிலத்தில் வினவியதற்கு ஆமாம் உய்வுண்டு வழியுண்டு என்று ஆங்கிலத்திலே விடை கிடைத்தது. மற்றோர் ரசமான சம்பவத்தைப் பற்றி ஸ்ரீஐயர் தனது நாட்குறிப்பில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் வெகு நாட்களாக நான் வயிற்றுவலிக்காரன். உணவு ஜீரணம் ஆவதில்லை தூக்கமும் இல்லை. இதைப்பற்றியே சதா கவலை. ஒருநாள் சுவாமி விசாரிக்கவே என் உடம்பைப்பற்றிக் கூறினேன். அச்சமயம் தலை-யெல்லாம் சூட்டால் கொதித்துக் கொண்டிருந்தது. ஆனால் அவர் விசாரித்த ஒரு நிமிசத்துள் கொதிப்பெல்லாம் பறந்து விட்டது. மூளை குளிர்ச்சி அடைந்தது. அன்று சௌம்ய வருடம் ஆடி பதினெட்டாம் திகதி அன்னமும் தோசையும் கொண்டு ஒரு பெண்மணி பகவானுக்கு விருந்தளித்தாள். எனக்கு அப்போது கஞ்சி தான் ஆகாரம் வேறு எதுவும் ஜீரணமாவதில்லை. எல்லோரும் என்னைச் சாப்பிடச்சொன்னார்கள். என்னால் ஜீரணிக்க முடியாது என்று மறுத்தேன். ஆனால் சுவாமியும் வற்புறுத்தவே நன்றாகச் சாப்பிட்டேன். ஆனால் என்ன ஆச்சரியம் ! அன்றிரவுதான் அயர்ந்த சுகமான நித்திரை! சுவாமிகளிடம் பூரணநம்பிக்கை உண்டாயிற்று. முதலில் சான் சுவாமிகளிடம் போவதை விரும்பாத என் குடும்பத்தினர் என் பிணி நீங்கியதைக்

கண்டதும் பகவான் சன்னிதானத்துக்கே தினந்தோறும் அன்னம் அனுப்ப ஆரம்பித்தனர். அடடா! எத்தனையோ மருந்துகளுக்கு எவ்வளவோ செலவழித்தோமே ! இதற்கு முன்னாலேயே இவரது பெருமையை உணராமற் போனோமே என்று தோன்றியது. எச்சம்மாள் என்று ரமணாசிரமத்தில் அழைக்கப்பட்டு வந்த ஓர் அம்மணி இருந்தார். அவருடைய அனுபவங்கள் இதைவிட ஆச்சரியமானவை. மிகவும் பரிதாபகரமான நிலையில் இவ்வம்மை ஆச்சிரமத்தை அடைந்தார். அருமைக் கணவனைப் பறிகொடுத்த துயரம் ஆறும் முன்னர்



புதல்வர்கள் இருவரும் ஆவிதுறந்தனர். எச்சம்மாளின் துயரம் வொல்லும் தரமன்று. வீட்டில் வசிக்க மனம் சகிக்கவில்லை. வீட்டைத்துறந்து தீர்த்த யாத்திரையாகக் கோகர்ணத்துக்குச் சென்றார். வடநாட்டிலே பல சாதுக்களை அடுத்துச் சேவை செய்தார். ஆனால் மனத்துயரம் சிறிதும் ஆறவில்லை.

இதன் பின் ஸ்ரீ மகரிஷிகளைப் பற்றி கேள்வியுற்று திருவண்ணா மலையை அடைந்து மலை மீதிருந்த மகரிஷிகளைத் தரிசித்தார். அவர் அசையாது வீற்றிருந்தார். எச்சம்மாளும் நின்ற இடத்திலே அசையாது ஒரு மணி நேரம் நின்றார். வாயைத்திறந்து ஒருவார்த்தையும் பேசவில்லை. ஆனால் இம்மௌனதரிசனம் அவரது எண்ணங்களில் ஒரு புரட்சியை உண்டு பண்ணியது. நின்ற இடத்திலேயே வேரூன்றி நின்றார். பொழுது போய்க்கொண்டிருந்தது. மாலையும் வந்தது பிறகு சற்று சமாளித்துக்கொண்டு பிரியாமல் பிரிந்து சென்றார். மகரிஷிகளின் அருளால் தம் துயர் எல்லாம் மறைந்து விட்டதாக கூடவந்த தேழியிடம் மகிழ்:வுடன் தெரிவித்தார்.

அன்று முதல் எச்சம்மாள் திருவண்ணாமலையையே தமது இருப்பிடமாகக் கொண்டார். தாம் அங்கே இருந்த முப்பது வருஷங்களுக்கு அதிகமாகவே முதலில் மகரிஷிகளுக்கு பிக்ஷை செய்விக்காமல் இவ்வம்மை சாப்பிட்டதில்லை இவ்வம்மையின் செல்வமெல்லாம் மகரிஷிகளின் கைங்காரியத்திலேயே செலவாயிற்று. மகரிஷிகள் மலைமேல் வசித்து வந்த காலத்திலே எச்சம்மாளின் வீடு ரமண பக்தர்கள் தங்கும் ஒரு சத்திரமாகவே விளங்கியது. ஞான வைராக்கியத்தில் எச்சம்மாள் மிகுந்த வைராக்கியம் உடையவர். அனேகமாக எப்போதும் தியானத்திலே ஆழ்ந்திருப்பார்.

முதல் மேல் நாட்டு பக்தர்


ஐரோப்பியர்களில் முதன் முதலாக மகரிஷிகளை நாடி வந்தவர் எப் எச் ஹம்ப்ரீ என்பவரே 1911ஆம் ஆண்டு முதல் போலீஸ் இலாகாவில் வேலை பார்த்தபோதிலும் மிகுந்த மதப்பற்றுள்ளவர் பூர்வ ஜென்மத்தில் தான் ஓர் சித்த கோஷ்டியில் சேர்ந்திருந்ததாக இவருக்கு ஓர் நம்பிக்கை. ஹம்ப்ரீ ஸ்ரீ மகரிஷிகளை மும்முறை சந்தித்து நடந்த சம்பாஷணைகளை எழுதி இங்கிலாந்திலுள்ள நண்பர் ஒருவருக்கு அனுப்பினார். இண்டர் நேஷனல் ஸைக்கிக் கெஜட் என்ற பத்திரிகையில் அவை பிரசுரமாயின. அதன் பின் சில காலத்துக்கெல்லாம் ஹம்ப்ரீ தமது வேலையை ராஜினாமா செய்து கத்தேலிக்க சந்நியாசி ஆனார். முற்கூறிய சம்பாஷணைகளிலுள்ள சில பாகங்களைக் கீழே காணலாம்.

ஹம்ப்ரீ : உலகுக்கு நான் ஏதாவது உதவி செய்யக்கூடுமா?

மகரிஷி : முதலில் உனக்கு நீ உதவி செய்து கொள் அதன் மூலம் உலகுக்கே உதவி உண்டு,

ஹம்ப்ரீ : உலகுக்கு உதவி செய்ய நான் விரும்புகின்றேன். செய்யலாம் அல்லவா!

அதிதிகள் அனைவருக்கும் அன்னமளிக்கும் வழக்கம் இதன்பின்னரே ஆச்சிரமத்தில் ஏற்பட்டது. நாளுக்கு நாள் பக்தர்களின் தொகை அதிகரித்துக் கொண்டே வந்த போதிலும் இவ்வழக்கம் இன்றும்



குறைவில்லாமல் நடந்து வருகின்றது. சில நாளைக்கெல்லாம் அன்னையின் விருப்பத்திற்கிணங்க கடைசி குமாரரும் ஆச்சிரமத்துக்கு வந்து சேர்ந்தார். அழகம்மையார் *1916* ம் ஆண்டில் ஆசிரமத்தில் சாசுவதமாக தங்கும் எண்ணத்துடன் வந்ததும் பக்தர்கள் பலர் கலக்கம் அடைந்தனர். மகரிஷிகளுக்கு அது பிடிக்காமல் போய் திடீரென்று வேறு எங்காவது ஓரிடத்துக்கு போய்விடுவாரோ என்று அச்சமுற்றனர் ஆனால் நல்ல வேளையாக அப்படி ஒன்றும் நிகழவில்லை.

ஆயினும் சிறிது காலம் அன்னைக்கு இடம் பழகவில்லை. மகரிஷிகளின் போக்கு அவருக்கு விசித்திரமாகத் தோன்றியது. பக்தர்களிடம் மகரிஷிகள் சகஜமாக பேசுவார். ஆனால் தாயினிடம் பேசுவதில்லை. அன்னைக்கு இதனால் மனத்தாங்கல் ஏற்பட்டது. இயற்கையே வெகு சீக்கிரத்தில் இதன் அர்த்தத்தை அழகம்மையாரே உணர்ந்து கொண்டார். ஆச்சிரமத்தில் உள்ள எத்தனையோ பேரில் அன்னையும் ஒருவர் ---- அவ்வளவுதான். மகரிஷிகளின் தாய் என்பதற்காகத் தனி உரிமைகள் ஒன்றும் அவருக்கு இல்லை என்ற உண்மை புலப்பட்டது.

இப்படிப்பட்ட சிறுசம்பவங்களைக் கொண்டே மகரிஷிகள் தமது மாதாவின் மனத்தை ஞானமார்க்கத்தில் பக்குவப்படுத்தினார் தமது பேச்சு நடத்தை மௌனம் முதலிவை மூலம் தாயின் ஞான வாழ்வைச் செம்மையுறச் செய்தார். அரிய உபதேசங்கள் புரிவார். உண்மையை உணர்த்தும் கதைகளைச் சொல்லுவார். லௌகிக வாழ்வில் நீடித்த வழக்கத்தினால் ஏற்பட்ட மூடநம்பிக்கைக-ளைச் சிறிது சிறிதாக மாற்றவும் முற்பட்டார். ஆனால் கட்டாயப்படுத்துவது மட்டும் இல்லை. ஒரேஅடியில் அர்த்தமற்ற ஆசாரங்களைக் கைவிடும்படி கண்டிப்புச் செய்வதுமில்லை. சிறிய சிரிப்புச் செய்கைகளினாலேயே இவைகளை விலக்கி வெற்றி பெற்றார்.


அடடா உன் புடைவையை யாரோ தொட்டு விட்டார்களோ ! ஐயையோ தீட்டு தீட்டு ! மடி கெட்டுப் போச்சே! போச்சு ஆசாரம். போச்சு பக்தியெல்லாம் மோக்ஷத்துக்கு குறுக்கே நிற்பபெதல்லாம் இதுதான் என்று சிரிப்பார். அழகம்மாளின் அந்திய காலத்தின் ஆறுவருடங்கள் இவ்வாறு கழிந்தன. முடிவு நெருங்க நெருங்க அன்னையும் பகவானிடம் பூரண நம்பிக்கை வைத்து அனைத்தையும் தத்தம் செய்துவிட்டதால் மகரிஷிகளே பக்கத்திலிருந்து அவருக்குப் பூர்ணமான ஞானத்தைப்புகட்ட முடிந்தது.

அன்னையின் மகா சமாதி

நோய்வாய்ப்பட்டிருந்த அன்னைக்கு *1922* ஆம் ஆண்டு மே மாதம் *19*ம் நாள் இறுதிநாளாயிற்று. மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கும் அன்னையின் மார்பில் வலது கையையும் தலையில் இடது கையையும் வைத்துக்கொண்டு மகரிஷிகள் நாள்முழுதும் கண்கொட்டாமல் உட்கார்ந்திருந்தார். இரவு எட்டுமணிக்கு அன்னையின் பிராணன் இருதயத்தில் இடுங்கியது. அதாவது விடுதலையுற்றது.

அன்னையின் நிலமையைக் கண்ட பக்தர்கள் பலர் அன்று சாப்பிடவில்லை. இரவில் மறுபடியும்

சமையல் ஆயிற்று. ஆனால் மகரிஷிகள் சாப்பிட எழுந்திருக்கவில்லை. மூச்சு அடங்கி அன்னை மகா சமாதிஅடைந்த பின்னரே மகரிஷிகள் எழுந்தார். அவர் குரலிலே எவ்விதமான கவலையோ தழுதழுப்போ இல்லை. இனி நாம் சாப்பிடலாம் வாருங்கள் என்று அழைத்து எப்போதும் போல் அவர் பக்தர்களுடன் உட்கார்ந்து சாப்பிட்டார். இரவு முழுவதும் அன்பர் யாவரும் பக்திப்பாடல்களைப்



பாடிக்கொண்டே விழித்திருந்தனர்.

மறுநாள் காலையில் சமாதிக்கிரிகைகள் தொடங்கின. உறவினர் வந்தனர் ஆயிரக்கணக்கான பக்தர்களும் வந்து கூடினர். சுவாமியும் அவர்களுள் ஒருவர் போலவே தோன்றினார். அன்னையின் புனிதவுடலை மலைக்கு அப்பால் உள்ள பாலிதீர்த்தம் என்னும் இடத்துக்கு அன்பர்கள் எடுத்துச்சென்றனர் பிரதக்ஷிண வழிக்கு வடக்கே ஓர் இடத்தில் குகை செய்து திருமேனியை அதனில் இருத்தி விபூதி கற்பூரம் உப்பு முதலியவற்றை மேலே கொட்டினர் . அதன் மேல் சமாதிகட்டி மஹரிஷிகளின் திருக்கரத்தால் அதன் மீது லிங்கம் ஸ்தாபித்தனர். மாத்துருபூதேச்வரர் என்ற பெயருடன் விளங்கும் அதற்கு இன்றும் யதோக்தபூஜை நடை–பெற்று வருகின்றது. ஒவ்வொரு வருஷமும் வைகாசிமாதம் கிருஷ்ணபக்ஷம் நவமி திதியில் மாத்துருபூதேசுவர மகாபூஜயும் சிறப்பாக நடைபெறுகிறது.

மகாபூஜையின் உட்கருத்து பின்வருவனவற்றால் நன்கு விளங்கும் ஒருசமயம் அன்னை போய்விட்டதைப் பற்றி ஒருவர் பிரஸ்தாபித்தார் இதைக்கேட்டுக்கொண்டீருந்த மகரிஷிகள் குறுக்கிட்டு இல்லை போய்விட்டாளாவது? தானேதானானாள் என்று கூறினார். மற்றொரு முறை மகரிஷிகள் ஆமாம் ! அவளிடம் இதுபலித்தது. இதற்கு முன் ஒருமுறை பழநிஸ்வாமியின் முடிவு நெருங்கிய போது– இதேமுறையைக் கையாண்டேன் ஆனால் காரியம் சித்திக்கவில்லை. கண்ணைத்திறந்து ஒரு விழிவிழித்தார் . பிராணன் போய்விட்டது என்று கூறினார்.

அன்னையின் இதயத்திலும் உச்சியிலும் கரங்களை வைத்துக்கொண்டிருந்த பன்னிரண்டு மணி நேரத்தில் நேர்ந்த சம்பவங்களைக் குறித்து மகரிஷிகள்.

அப்போது அன்னையின்பல ஜன்மவாசனைகள் துரிதமாக வேலைசெய்தன. வெளிஉலகத்தின் அறிவு மங்கிவிட்டதால் சூக்ஷ்ம நிலையிலே ஒவ்வொரு காட்சியும் அவள்முன்பு அடுத்தடுத்துத் தோன்றலாயிற்று அச்சமயத்தில் அந்த ஜீவனை இருதயத்தில் ஒடுங்கச்செய்யாது இருந்தால் அது எத்தனையோ ஜன்மங்கள் எடுக்க வேண்டிஇருந்திருக்கும் ஆனால் இறைவன் திருவருளால் அவ்வாத்மா அஞ்ஞான நிலையைக்கடந்து மீளாப்பதவியை அடைந்தது என்று கூறியுள்ளார்.

ஸ்ரீ மாத்ரு பூதேஸ்வர சந்நிதானம் அன்னையின் சமாதி மேல் சாத்திரலக்ஷணம் பொருந்திய ஓர் ஆலயம் அமைக்கப் பெற்று அங்கே நித்திய பூஜைகள் நடந்து வருகிறது.

(இன்னும் வரும்.......)



எச்சம்மாள்



உ

"அம்மனைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்"

அம்பாள் துணை







நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரீ சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வராகி சூலினி மாதங்கியென்
றாயகி யாதியுடையாள் சரணம் அரண் நமக்கே.

## மேற்கு ஈலிங்

# ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் கோவில்

## விக்கிரம வருடம் - 2000

# முதல் ஆண்டு அலங்கார உற்சவ விழா விஞ்ஞாபனம்

அம்பாள் அடியார்களே,

அடியார்களின் இடர்களைத் தீர்த்து வாழ்வாங்கு வாழவைக்க பல அவதாரங்கள் கொண்டு அருள் பாலிக்கும் அன்னை ஆதிசக்தி இலண்டன் மாநகரில் ஈலிங் பதியில் கனக துர்க்கையாக வீற்றிருந்து வேண்டுவார் வேண்டுதலை அளித்து அருள் மழை பொழிந்து வருகிறாள்.

இத்திருக்கோவிலின் முதல் ஆண்டு அலங்கார உற்சவம் நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் ஆனித் திங்கள் 24ம் நாள் (7-7-2000) வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தைந்து (25) நாட்களும் காலை, மாலை நிகழ்ச்சிகளுடன் திருவிழா நடைபெற அம்பாள் திருவருள் பெருகியுள்ளது. அக்காலங்களில் அடியார்கள் அனைவரும் ஆலயத்திற்கு வருகை தந்து அம்பாளின் பேரருளைப் பெறுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

## நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| காலை | 8.00 | மணி – உதயப் பூசை |
| காலை | 9.00 | மணி – சங்கற்பம், கிரிகைகள் ஆரம்பம் |
| காலை | 10.00 | மணி – அம்பாளுக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் விசேட திரவ்ய அபிஷேகம் |
| காலை | 10.30 | மணி – அம்பாளுக்கு நவகலசஸ்நபந அபிஷேகம் |
| நண்பகல் | 12.00 | மணி – விஷேட தீபாராதனை, பூஜைகள் |
| பிற்பகல் | 01.00 | மணி – பிரசாதம் வழங்கல், அன்னதானம் |

| | | |
|---|---|---|
| மாலை | 07.00 | மணி – சாயரட்சை பூஜை |
| மாலை | 07.30 | மணி – விஷேட தீபாராதனைகளோடு வசந்தமண்டப பூஜை |
| மாலை | 8.15 | மணி – அம்பாள் திருவீதியுலா |
| மாலை | 9.00 | மணி – அம்பாள் வசந்தமண்டப இருப்பிடம் வருதல் |
| மாலை | 9.00-9.30 | மணி – காளாஞ்சி பிரசாதம் வழங்கலும், ஏனைய அர்ச்சனைகளும் |
| மாலை | 9.15-10.00 | மணி – சொற்பொழிவு, கதாகலாட்சேபம் |
| மாலை | 10.15-11.00 | மணி – அடியார்களுக்கு பிரசாதம் வழங்கல் |

| | |
|---|---|
| **07-07-2000** | **1ம் நாள் உற்சவம்** |
| **31-07-2000** | **25ம் நாள் உற்சவம்** |
| **01-08-2000** | **பூங்காவனம்** |
| **02-08-2000** | **வைரவர் மடை** |

**சொற்பொழிவு, கதாகலாட்சேபம்**
**தமிழருவி சிவகுமாரன்**
**பேராசிரியர் அருணை பாலவறாயன்**

மேற்படி விழாக் காலங்களில் அபிஷேகத்திற்கு வேண்டிய பால், தயிர், இளநீர், பன்னீர், பழவகைகள் போன்றவற்றையும் பூஜைக்கு வேண்டிய பூக்கள், மாலைகள் தந்தும் அப் பெரு விழாவைச் சிறப்புடன் நிறைவேற்ற திருவிழா உபயகாரர்களும், அடியார்களும் பூரண ஒத்துழைப்பைத் தந்துதவுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

மங்களம் உண்டாகுக

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

இங்ஙனம்,

ஆலய பரிபாலன சபையினர், பக்த அடியார்கள், 15-06-2000

5 CHAPEL ROAD, WEST EALING, LONDON W13 9AE. TEL: 020 8810 0835

# லக்சுமிஸ் ஜுவலர்ஸ்
# &
# சில்க் ஹவுஸ்



East Ham மஹாலக்ஷ்மி ஆலயமருகே
பிரமிக்கத்தக்க அழகுக்காட்சியறையுடன்
வைரத்தாலிக்கொடி, சங்கிலிகள், காப்புகள்,
அட்டியல்கள்,படையப்பா நெக்கிலஸ்கள்
என சகல தங்க நகைகளும்
22 கரட்டில் உறுதியானவை.



திருமணத்திற்கான சிறந்த ரககூறைச் சேலைகள்,
காஞ்சிபுரம் ரங்கோலி,
கோலம், பட்டுப்புடைவைகள்

இன்னும் புதிய மிலேனியத்தில்
உங்கள் புதிய வாழ்வோடு இணைகிறது
DAKSHINOTRI
(டக்ஷ்சிநோற்றி)



வாரத்தில் ஏழு நாட்கள் திறந்திருக்கும்

தரம்! தெரிவு!! மலிவு!!!
இவையனைத்தையும் மிக மலிவு விலையில் பெற்றிட

**LAKSHMIS JEWELLERS & SILK HOUSE**
**276 High Street North, East Ham E12 6SA**
**Tel: 020 8470 5600 Fax: 020 8470 3448**

லண்டனில் முதலாவது தமிழர் நகைமாளிகை

# Western Jewellers

**Specialist in 22 ct. Gold Jewellery**



## Creates the New Woman

230 UPPER TOOTING ROAD,
LONDON SW17 7EW

**Tel : 020 8767 3445**

வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்

---

சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் வடிவமைக்கப்பட்டு வாசன் அச்சகத்தினரால் ( Tel: 020 8646 2885)
இலண்டனில் அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 09.07. 2000 அன்று வெளியிடப்பட்டது.